# திராவிடநாடு

3—5—59 | வார வெளியீடு | விலை 16 காசு


## புதிய மேயர்



திரு. அ. பொ. அரசு அவர்கள்

# தொடர்பு இல்லையாம்

ஒரு டாக்டர்! நோயைத் தீர்ப்பதாகச் சொல்லி, பத்தாண்டாயிற்று!! திடீரென்று ஒருநாள், நொந்துபோன நோயாளி, வேறொரு டாக்டரைத் தேடிக் கிளம்பியதும், "நோயை என்னால் தீர்க்க முடியாத காரணம் என்ன தெரியுமா, நான் உண்மையிலேயே டாக்டரல்ல; சாமியார்,'' என்று சொன்னால் எப்படியிருக்கும்? அதுபோல, மக்களுக்கு நன்மை செய்யக்கூடியவர்களே நாங்கள்தான், எங்களைத்தான் மக்கள் நம்புகிறார்கள், நாங்களில்லாவிட்டால் கதியே இல்லை மக்களுக்கு, என்றெல்லாம் இது நாள்வரை கூறிக்கொண்டிருந்த காங்கிரஸ், இப்போது சொல்கிறது, "மக்கள் தொடர்பில்லை, எங்களுக்கு!,'' என்று. மானத்தை இழந்தவர்கூட, தம்மை இன்னாரென அறிமுகப்படுத்திக்கொள்ள வெட்கப்படுவர். நடைபெற்ற நகராட்சிமன்றத் தேர்தலிலே, தோல்வியினை ஆரமாகப்பெற்ற ஆளும் கட்சி, துளியும் சங்கடமில்லாமல் சொல்கிறது, எமக்கு மக்கள் தொடர்பு இல்லை என்று.

கடந்த கிழமை, கோவைமா நகரிலே, தமிழ்நாட்டுக் காங்கிரஸ் காரியக் கமிட்டி கூடிற்றும். அதுபோது, நகராட்சிமன்றத் தேர்தல்களிலே, எற்பட்ட தோல்விக்குக் காரணம் யாதென ஆராய்ந்து, அறிவித்திருக்கிறது. மக்களின் தொடர்பு இல்லையாம்! அதுதான் தோல்விக்குக் காரணமாம்!!

போட்டியில் ஈடுபடச் செல்கிற பயில்வான், நடைபெற்ற போட்டியில் ஒ[illegible]டபட்டுத் தோற்றான பிறகு, "ஏன் தோற்றதேன் தெரியுமா? தயார்தீனி, தின்னவில்லை! உடம்பைக் கவனித்துக்கொள்ளவில்லை!,'' என்றால், எவரும் ஒப்பார். தோல்விக்குக் காரணம் சொல்கிறானே ஒழிய, இதெல்லாம் செய்யாமலா 'போட்டி'க்கு வருவான்? முன்பே, வராமலிருந்திருப்பானே என்றே எண்ணுவர்.

ஏதோ நேற்றுவரை, இந்த உண்மை தெரியாமலிருந்தவர்கள் போலவும், இப்போது தான் ஞானோதயம் உண்டானோர் போலவும், தேர்தலில் தோற்கக்காரணம், எங்களுக்கு மக்கள் தொடர்பு இல்லாததுதான், என்கிறார்கள். இந்த உண்மை ஏன், இவர்களுக்கு இத்தனை நாளும் தெரியாமற் போயிற்று? திடீரென இன்று மட்டும் தெரிந்திடக் காரணம் என்ன! ஒருவேளை, திமிரில் இருந்தனரா, அல்லது மக்கள் மன்றத்தை அறிந்திடும், ஆற்றலற்றவர்களா என்கிற ஐயங்கள் எழத்தான் செய்யும்.

கட்டிடத்திற்கு அடிப்பீடம் போல, மரத்துக்கு வேர்போல, ஒரு அரசியல் கட்சிக்கு தேவையானவர்கள், மக்கள்தான். மக்களுக்காகத்தான் அரசியல் இயக்கங்கள் உருவாகின்றன. மக்களின்றேல், கட்சியில்லை! இருந்தும், காங்கிரசினர், சொல்லுகின்றனர், இத்தேர்தலில், தோற்கக் காரணம் மக்கள் தொடர்பு அற்றுப்போனதுதான் என்று. அப்படி அற்றுப் போனபிறகு, தமிழ்நாட்டுக் காங்கிரசாரைக் கேட்கிறோம், எதற்கு ஒரு அரசியல் கட்சி? எதற்குக் காங்கிரஸ்? எந்தத் தொடர்பு வேண்டுமோ, அந்தத் தொடர்பு அற்றது என்று நீங்களே ஒப்புக்கொள்ளும் போது, எதற்காக இனியும் காங்கிரஸ் இருக்கவேண்டும்? ஆணிவேரே போனபிறகு, இலையும் கிளையும், எத்தனை நாளைக்கு இருக்க முடியும்! எதற்காக, நாட்டில் மக்கள் தொடர்பில்லாத கட்சி? இதைக் கண்டுபிடித்தபிறகு, பேசாமல், காங்கிரசை, காந்தியடிகள் சொன்னதுபோல் கலைத்துவிடலாமே!!

காங்கிரஸ் பிடிக்கவில்லை, மக்களுக்கு—என்று நீங்கள் சொல்லிவிடுவீர்கள்; கனம்கள், என்ன சாமான்யரா? அதனால், கூடியமர்ந்து, டி. டி. கிருஷ்ணமாச்சாரி போன்ற திறமைசாலிகளை (முந்த்ரா!—ஞாபகம் வரவேண்டாம் உங்களுக்கு) தனி அழைப்புமூலம் தருவித்து, அரியதொரு ஆராய்ச்சி நடத்தி, இந்த உண்மையினைக் கண்டுபிடித்திருக்கிறார்கள்!!

அப்படித்தான் கண்டுபிடித்தார்களே, அதையாவது வெட்ட வெளிச்சமாக, ஒளிவு மறைவு இல்லாமல் மக்களின் தொடர்பை நாங்கள் இழந்துவருகிறோம் என்று சொல்லலாமன்றோ? சொன்னால் நீங்கள் எல்லாம் உடனே கேலி செய்வீர்களே என்று பயந்து, சுற்றிவளைத்து, "காங்கிரசாருக்கு மக்கள் தொடர்பு முன்புபோல இல்லை!'' என்று சொல்லியிருக்கிறார்கள்.

உண்மையில் காங்கிரசாருக்கு சுதந்திர நாட்களைவிட இப்போதுதான், மக்களின் தொடர்பினைப் பெறுவதற்கான, வாய்ப்பும் வசதிகளும் இருக்கின்றன. கடந்த பத்தாண்டுக் காலமாக ஆட்சி நடத்துவது காங்கிரஸ்தான்!—மக்கள் சுலபத்தில், இதனையுமா மறந்துவிடுவர்? தினசரி ஏடுகளைப் பிரித்தால், ஒரு ஏட்டில் [illegible]டத்திலாவது காங்கிரஸ் தலைவர்களின் பேச்சும், செய்திகளும் இல்லாத தாளேகிடையாது!—பார்க்காமலா இருக்கிறார்கள் மக்கள்?

அதுமட்டுமல்ல, இந்தக் காரியத்தைச் செவ்வனே செய்வதற்காக டில்லியில் ஒரு மந்திரி, சென்னையிலும் ஒரு மந்திரி ஏற்பாடு செய்துவைத்திருக்கின்றனர். இது போதாதென்று, திரைப்படம் எடுத்தும் காட்டுகிறார்கள். கலைஞர்களுடன் தொடர்புகொண்டு, அவர்கள் மூலமும் மக்களுடன் தொடர்பு கொள்ளப் பார்க்கிறார்கள். தினசரி ஒவ்வொரு படக்கொட்டகையிலும் பண்டித நேருவின், புன்சிரிப்பையும், துருதுருப்பையும் படமாகக் காட்டுகிறார்கள். ஊருக்கு ஊர் பணம் செலவுசெய்து, காந்தியடிகளின் சிலை நாட்டு விழாக்கள், செய்கிறார்கள். சுதந்திர நாள், குடியரசுத் திருநாள் என்றெல்லாம் சொல்லி, விளக்கலங்காரமும் விழாக் கேளிக்கைகளும் செய்யாமலில்லை. இவ்வளவும் போதாதென்று, ஆளும் அமைச்சர்களும் மாதத்தில் இருபது நாட்கள், அங்கே திறப்பு விழா, இங்கே கல் நாட்டு விழா என்று போய்க் காங்

( 16-ம் பக்கம் பார்க்க )

# உதயம்

[...ர் 17] ஆண்டுச் சந்தா ரூ. 8. (3—5—59) தனிப் பிரதி 16-காசு [இதழ் 42


பெருமகிழ்ச்சி எய்துகிறோம்! பெரும்பொறுப்பினை ஏற்கும், முதற் கட்டம் நெருங்குகிறோம்!!—சென்னை நகராட்சி மன்றத்திலே, தி. மு. க. அமர்ந்துவிட்டது. ஆட்சிக்கோலையும் கையிலே ஏந்திவிட்டது. தோழர் அ. பொ. அரசு அவர்கள் இப்போது மேயர். நேற்றுவரை தடியடியும் சிறைவாசமும் பெற்று, கடமை தவறுக் காளைகளாக உலவிய, கழகக் கண்மணிகள், தமிழகத்தின் தலைநகரத்துக்குத் தந்தையர் எனும் நிலை. உள்ளம் துள்ளுகிறது; மகிழ்ச்சியால்! ஒருமுறை, பழைய நினைவினைக்கொள்வோம்—பாருங்கள், தந்தையே ஆசி கூறுங்கள் என, இருக்கும் திக்குநோக்கி அமைதியாகச் செப்புவோம்!!

45-பேர்தானே — நமது தந்திரசாகசம் பலிக்காமலாபோகும்—பணமூட்டையைக் கொண்டு காட்டுவோம்-என்று, வலம்வந்தது, காங்கிரஸ். வெளிப்படையாக மேயர் தேர்தலில் கலந்துகொள்ளவில்லை என்று அறிவித்ததே தவிர, நாம் அமரக்கூடாது என்பதற்காகக் கடைசிவரையில், சகலமுயற்சிகளையும், காங்கிரஸ் எடுக்கத் தயங்கவில்லை, எனினும், கம்யூனிஸ்டு உறுப்பினர்களின் கடமைப் பொறுப்பும், சுயேச்சைத் தோழர்களின் அன்பும், வெற்றியைத் தந்துவிட்டது! வென்றோம்—அமர்ந்துவிட்டனர் தோழர்கள்!!

இவர்களுக்கு என்ன தெரியும்? பேசத் தெரியும், என்றார்கள்! பேசவும் தெரியும், ஓட்டுப் பெறவும் தெரியும் என்பதைக் காட்டினோம். ஓட்டு வாங்கத் தெரியும்; பொறுப்பை ஏற்கத் துணிவரோ என்றனர். நாளை ஒரு பெரும் சமுதாயத்தின், புதுவாழ்வையே செப்பனிட இருக்கும் கழகத்தைப் பார்த்து. ஏற்றோம்! நாளையென்ன சொல்வரோ என எதிர்பார்க்கிறோம்!!

பொறுப்புகள் அதிகமாகின்றன — ஒரு பக்கம் ஆனந்தம் அலைமோதிடினும், இன்னொரு பக்கம், ஏற்கும் பொறுப்பினைச் செவ்வனே செய்துகாட்ட வேண்டுமே எனும் அச்சமும் இல்லாமலில்லை. "உங்களுக்கென்ன? எதிலுமே, அச்சம்தான்! இருக்கின்றோம் நாங்கள்?" எனச் சுடர் முகம் காட்டும், ஒளி விளக்குகள் தென்படுகிறார்கள், எனினும், புதியபாதை. அன்பும், கடமையும், அதிகமாகவேண்டும், கழகத்தவருக்கு; அதிலும் பொறுப்பினை ஏற்போருக்கு.

பிறரைப்போல, அல்ல நாம்! இது ஒரு பெருமையெனக் கருதும் நிலையுமல்ல, நம்முடையது; என்ன இருந்தாலும், நாட்டை ஆள்வது, காங்கிரஸ் என்பதனை மறக்கமுடியாது. இரண்டினையும் நாமே ஆளும் அந்தநாள் வரவேண்டும். அப்போதுதான், பெருவெற்றி காணமுடியும். நாடே நம்முடையது எனும் இன்பநாள் வரவேண்டும். அன்றுதான், நாம் முழு வெற்றியினை அடையமுடியும்.

மேயராக வந்திருக்கும் நமது அன்புக்குரிய தோழர் அ. பொ. அரசு அவர்கள் நீண்டகாலமாகவே நமது கழக முன்னணி வீரர்களில் ஒருவராக இருந்து பெரும்பணி யாற்றிவருபவர் என்பதுமட்டுமல்ல, கட்சிக்கு அப்பாற்பட்ட பொதுப் பணிகளிலும் பங்கேற்றுப் பொதுமக்களின் தொடர்பைப் பெறுவதில் ஆர்வமும் அக்கரையும் உள்ளவர். நாட்டுக்கு நல்ல காரியம் யாரால் செய்யப்பட்டாலும் அதனை வரவேற்றுப் பாராட்ட நமது கழகம் என்றுமே தயங்குவது கிடையாது.

சென்னை நகராட்சி மன்றத்தில் எந்த நல்ல காரியம் செய்யப்பட்டாலும், அந்தக் காரியம் காங்கிரஸ்காரர்களால் செய்யப்பட்டாலும், அல்லது வேறு கட்சியினரின் முயற்சியால் செய்யப்பட்டாலும் அ. பொ. அரசு அவர்களும் மற்றும் நமது கழகத்தின் சார்பாக நகரமன்ற உறுப்பினர்களாக இருந்து வந்த கவுன்சிலர்களும் வரவேற்றுப் பாராட்டாமல் இருந்ததில்லை. **இது நமது இலட்சியங்களில் ஒன்று.**

இப்பொழுது உதவி மேயராக வந்திருக்கும் தோழர் **சிவசங்கரன்** அவர்களும் நீண்ட காலமாகவே இயக்கத்திலிருந்து அரும்பணியாற்றி வருபவர் — கொள்கையில் உறுதி படைத்தவர்— பொதுநலப் பணியில் பெரும் ஆர்வம் கொண்டவர்—பதவி எதனையும் எதிர்பாராதவர்— உதவி மேயர் நீர்தான் என்றவுடன் அதிர்ச்சிகூட அடைந்திருப்பார். அந்த அளவுக்குத் **தொண்டுள்ளம் படைத்தவர்** — பதவிப் பிரியரல்ல.

மேயரைப் போலவே உதவி மேயரும் தந்நலம் கருதாது பொதுநலம் பேணும் பெற்றியினர் என்பதை நினைக்கும்போது, இவர்கள் காலத்தில் சென்னைமா நகரம் நல்ல பயனை அடைய் வழியிருக்கிறது என்று எண்ணிப் பூரிப்படைகிறோம். இதற்கு, இப்போது கவுன்சிலர்களாக வந்திருக்கும் நமது தோழர்களும் எதிர்க்கட்சி அங்கத்தினர்களும் மனமொத்த ஒத்துழைப்பைத் தரவேண்டும்- தருவார்கள் என்ற நம்பிக்கை நமக்கு உண்டு.

கழகத் தோழர்களின் ஆர்வத்தையும், வளரும் கழகப்பட்டியலையும்பார்க்கும்போது,இன்பத்திராவிடம் வெகுதூரத்திலில்லை என்பது, தெளிவாகத் தெரிகிறது. அதனை எண்ணி விரைவோம்! வெல்வோம்!!

★

# “கேலிக் கூத்தல்ல!”

— பழநி —

“இளஞ்செழியன், மதியழகன், அன்பழகன்! ஏனிந்த மோகமோ, இருக்கும் பெயர்களை மாற்றுவதில்? பழைய பெயர்களுக்கு என்னவாம்! அவைகளைச் சொல்லி அழைக்க எவ்வளவு இனிமையாக இருக்கிறது! அதைவிட்டு, இப்படி மாற்றிவைத்துக்கொள்வது எதற்கு? இதெல்லாம், விளையாட்டுத்தனம்! விவேகிகள் செயலா? எத்தனையெத்தனையோ பிரச்சினைகள் நம்மைச் சுற்றி உள்ளன, ஐந்தாண்டுத் திட்டங்களைப் போட்டுக்கொண்டிருக்கிறோம். இந்த நேரத்தில் இப்படி ஒரு சிலர், பெயரை மாற்ற ஒரு கட்சி வைத்துக்கொண்டிருக்கிறார்களென்றால், செச்சே, என்ன அர்த்தம்! இதெல்லாம் எதற்கு? என்ன இருக்கிறது பெயரில்?”

*திராவிட இயக்கத்தின் முயற்சியை, எள்ளி நகையாடவும், கேலி பேசவும் முயல்வதுண்டு, உயர்ந்த இடத்திலிருப்பதாகத் தங்களை எண்ணிக்கொண்டிருப்பவர்கள்.*

*குறிப்பாக, வடக்கேயிருப்பவர்களுக்கு, புதிராகவும் புரியாததாகவுமிருக்கக் கூடும், இந்தப் பெயர் மாற்றும் செய்தி. பழைய பெயர்கள், இழிவுபடுத்துவதாகவும், ஏளனமாகவும் கருதி எண்ணற்றவர்கள் புதுப்புதுப் பெயர்களை வைத்துக்கொள்கிறார்கள் என்கிற விபரம் கேட்டால், விலாநோகச் சிரிக்கவும் செய்வர், வடக்கே!!*

*இங்கே, ஆதிகேசவன், பூவராகவன், நரசிம்மன் என்பனபோன்ற பெயர்களெல்லாம் தினசரி மாற்றப்படுகின்றன!*

*ஒவ்வொரு தி. மு. க. கூட்டத்திலும், ஆர்வமுள்ள அன்னையரும், அன்புகொண்ட தந்தையரும், தத்தமது குழந்தைகளைக் கொண்டு வந்துகொடுத்து, பேச்சாளர்களிடம் பெயரிடச் சொல்லி வற்புறுத்துகிறார்கள்! விரும்புகிறார்கள்!!*

*வீரமணி, பாண்டியன், செங்குட்டுவன், இளங்கோ, சோழன், செல்வன், மலர்க்கொடி, மல்லிகா, அஞ்சுகம், அல்லி, செந்தாமரை— இப்படி பற்பல பெயர்கள்!*

*இப்படிச் செய்வது சிறுபிள்ளைத்தனமாகவோ, அசட்டுத்தனமாகவோ இருக்குமேயானால், இந்தளவுக்கு இன்னும் தொடர்ந்து நீடிக்காது. ஏனிப்படி, பெயர் மாற்றம் செய்யப்படுகிறது? புதிய புதிய பெயர்கள் வைப்பதிலே ஏன் ஆவல் ததும்புகிறது, என்பதற்கான அடிப்படைக் காரணத்தை வடவர்கள் தெரிந்துகொள்ளவேண்டும். நாமறிவோம், நல்லவர்களும் அறிவர். ஆனால் பிறர் அறியார், இதில் தொக்கியிருக்கும், இன்றியமையாமையை. தனிப்பட்டவர்களின் பெயர்கள் மட்டுமல்ல, ஊர்களின் பெயர்கள், விழாக்களின் பெயர்களைக்கூட நாம் மாற்றியிருக்கிறோம்.*

*‘சங்கராந்தி’ போய், ‘பொங்கல் திருநாள்’ என்றுதான் தமிழகம் சொல்கிறது. ‘மகாசனம்’ ‘அக்கிராசனாதிபதியவர்களே’, ‘உபன்யாசம்’, ‘உற்சவம்’, ‘உபவாசம்’ போன்ற சொற்கள், இப்போது இல்லை, தீபஸ்தம்பம் என்றால் பலருக்குப் புரியாது! ‘கலங்கரை விளக்கம்’ பழக்கமான சொல்லாகிவிட்டது!!*

*திடல்—அங்காடி—காவலர் இல்லம்—மன்றம், என்பன போன்ற சொற்கள், இன்று நடைமுறைக்கு வந்துவிட்டன.*

*‘தேசம்’ என்பதைவிட ‘நாடு’ தான் இப்போது நாவில் வருகிறது! பழுத்த காங்கிரஸ்காரர்கள் கூட, இப்போது, ‘மகாத்மாஜி’ என்று சொல்வதில்லை; காந்தி அடிகள் என்றுதான், ஆனந்தத்தோடு சொல்கின்றனர்!!*

*வெறியுமல்ல, பித்துமல்ல இதற்குக் காரணம். அப்படியிருந்தமாயின், இவ்வளவு விரைவில், இந்த எண்ணம், எல்லா இடங்களிலும் பரவியிருக்க முடியாது.*

*தி. மு. க. இப்படிப்பட்ட வெறியையும் வேதனை விளையாட்டையும் செய்வதாக வாதத்துக்காக வைத்துக்கொள்வோம்—இந்தப் போக்கின்மீது, மக்களுக்கேன் ‘தணியாத ஆர்வம்’ பிறக்கவேண்டும்? கேலிசெய்பவில்லையா, காங்கிரசுக் காரர்கள்! இருந்தும், மக்களுக்கு ஆவல், பிறப்பானேன்? கண்டனங்களையும், கேலிச் சொற்களையும் நம்மீது அள்ளித் தெளிப்போருக்கு, அதற்கான காரணம் சொல்லத் தெரியாது.*

**சிறுவயதில், தங்கள் தாய் தந்தையர் வைத்த பெயர்கள் சரியில்லையென்று சொல்லி இங்குள்ள நூறுபேர் தங்கள் பெயர்களை மாற்றி வைத்துக் கொண்டார்கள்.**

**பன்றிதிருடி—கோழி நகம்—ஆட்டுத் தலையன்—என்பன போன்ற பெயர்கள் எல்லாம் மாற்றப்பட்டுவிட்டன.**

பார்மோசாவிலிருந்து *வருகிறது செய்தி.*

*யார் எங்கேயிருந்தாலும், தங்கள் பெயர், இழிவுபடுத்துவதாகக் கருதினால், பெயர்களை மாற்றிக் கொள்வதில் தவறில்லை. இது அவர்களுடைய புத்தெழுச்சியையும், உறுதியையும் காட்டுவதாகும்.*

( 14-ம் பக்கம் பார்க்க )

# மானம்?

மாரி--அறவாழி

நெஞ்சிலே நெருப்பை வாரிக் கொட்டியது போலிருந்தது முத்துக் குமரனுக்கு. அவனால் அந்த அதிர்ச்சியைத் தாங்கிக்கொள்ளவே முடியவில்லை. என்ன கொடுமை! இந்த மனிதர்கள் நாக்கில் நரம்பென்பதேயில்லாமல் எத்தகைய பொய்யான வார்த்தைகளை உதிர்த்து விடுகின்றனர்! சந்தனக் கிண்ணத்தில் சாணத்தின் நாற்றம் வீசுகிறதென்று கூறினால், அதை விடப் பெரியதொரு பித்தலாட்டம் வேறு என்னவாக இருக்க முடியும்...? எல்லாமே போலிதானா? இந்த உலகில் எல்லாமே வெளி வேடம்தானா...?

மார்பை அழுத்திப் பிடித்துக் கொண்டு அறைக்குள் நுழைந்தான். விளக்கை அணைத்து இருளை வரவழைத்துக்கொண்டு படுக்கையில் விழுந்தான். பலகணியின் வழியாக நீலவானம் தெரிந்தது. அங்கே தங்கத் தகடாக நிலவு தண்ணொளி பொழிந்து கொண்டிருந்தது. அத்துணை தூய நல்மனம் கொண்ட அந்த நிலவையும், இந்த நன்றிகெட்ட மனிதர்கள் குறை கூறாமல் இருப்பதில்லை. அதன் முகத்தில் தோன்றும் சில கரும்புள்ளிகளை வைத்துக் கொண்டு, அதன் அழகுக்கும் களங்கம் கற்பித்துவிடுகின்றனர். சே! எத்தகைய கேவலமான மனப்பான்மை இது! குரங்குகள்கூட கசப்பான காய்களைக் கடிப்பதில்லை. ஆனால் இவர்களோ இழிவானவற்றையே சொல்லிலும் செயலிலும் விரும்புகின்றனர்.

அவன் புரண்டு படுத்தான். உடலுக்கு இதமாக இருந்தது. ஆனால் ஊமைக்காயம் பட்டுக்கிடந்த உள்ளத்திற்கு......?

கொடுமைகளிற் கொடுமையான "இளமையில் வறுமைக்கு" நெருங்கிய உறவினன் முத்துக்குமரன். பள்ளிப் படிப்பைப் பாதியில் விட்டு விட்டுப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன் ஓடிப்போய், பயங்கரமான இராணுவத்தில் சேர்ந்தான். இராணுவம் பயங்கரமானதுதான்..... ஆனாலும் வறுமையைவிட மென்மைபடைத்தது. எழுதிக் கொடுத்த ஒப்பந்தப்படி அதில் பதினைந்து ஆண்டுகள் உழைத்து விட்டு, அண்மையில்தான் ஓய்வு பெறும் நோக்கத்துடன் பிறந்த மண் வந்திருந்தான். இனி, அவன் மீண்டும் இராணுவத்திற்குச் செல்லவேண்டும் என்ற அவசியம் இல்லை. விரும்பினால் மட்டும் போகலாம்.

அவனது கிழப்பெற்றோர், மகனுக்கொரு திருமணத்தை முடித்துப் பேரக்குழந்தைகளைப் பார்த்துவிட்டுக் கண்களை மூடிவிடலாம் என்ற ஆசையுடன் அதற்காவனவற்றைச் செய்துவந்தனர். முத்துக்குமரனும் அதற்கு ஒத்துக்கொண்டான். பதினைந்து ஆண்டுக்கால முரட்டு வாழ்க்கை, அவனது உள்ளத்தில் மென்மை வெறியைக் கிளப்பிவிட்டிருந்தது. பிறரைப் போலத் தானும், குடியும் குடித்தனமுமாக வாழவேண்டும் என்று அவன் விழைந்ததில் வியப்பொன்றும் இல்லை. இராணுவத்திலிருந்து விடுதலைபெற்று; கிடைக்கும் பணத்தைக்கொண்டு ஒருசிறு வியாபாரத்தையும் துவக்கிவிட வேண்டும் என்பது அவன் முடிவு.

நாள்தோறும் விடியற்காலையிலேயே எழுந்து, உடற்பயிற்சி செய்வது அவனுக்கு இராணுவ வாழ்க்கை அளித்த நல்ல பழக்கம். இங்கே அதுபோல் எதுவும் செய்ய முடியாவிடினும் விடியற்காலையில் எழுந்திருப்பது மட்டும் தவறாது நடந்துகொண்டிருந்தது. எழுந்தவுடன் பற்குச்சியை வாயில் திணித்துக்கொண்டு நெடுந்தொலைவு, ஆற்றங்கரையோரமாகவே நடந்து சென்று வருவான்.

வழக்கம்போல அன்றும் கரையோரமாகவே நடந்து சென்று கொண்டிருந்தான் முத்துக்குமரன். வழியிலே ஒரு நந்தவனம். அதிலே ஒரு பிள்ளையார் கோயில். நாற்புறமும் மலர்ச் செடிகளால் சூழப் பெற்றிருந்த அந்த இடம், அவனது உள்ளத்தைப் பல நாட்களும் கவர்ந்துகொண்டிருந்தது. ஆனால், அங்கு உட்கார்ந்திருக்க வேண்டும் என்ற ஆசை அதுவரை தோன்றியதில்லை. அன்று என்னவோ அந்த ஆசை தோன்றியது. உடலும் மனமும் சற்றுச் சோர்வாக இருந்ததால் அவன் நந்தவனத்திற்குள் சென்று மேடைமேல் உட்கார்ந்து கொண்டான். அவன் நெஞ்சம், தனது திருமணத்தைப் பற்றியும் திட்டமிடப்பட்ட எதிர்காலத்தைப்பற்றியும் சிந்தித்துக் கொண்டிருந்தது.

சரசரவென்று இலைகள் உராயும் அரவம் கேட்டது. 'கம்'மென்ற நறுமணம் காற்றிலே மிதந்து வந்தது. "தளுக்" "தளும்" என்று தண்ணீர் ததும்பும் ஓசையும் கேட்டது. சிந்தனையிலிருந்து விடுபட்டான் முத்துக்குமரன். எதிரே ஒரு இளம் மங்கை, வார்த்தெடுத்த வண்ணச் சிலைபோல நின்று கொண்டிருப்பதைக் கண்டான்.

அப்போதுதான் நீரில் மூழ்கி எழுந்து வந்திருந்தாள் அவள். நீண்ட கூந்தலிலிருந்து தண்ணீர்

சொட்டிக்கொண்டிருந்தது. இடுப்பிலே செப்புக்குடம். அதன் கழுத்தை இறுகப் பிடித்திருந்தன வாழைத்தண்டுக் கரங்கள். நகைகள்இல்லாத உடலுக்கு அழகு இல்லையென்பது குருடனின் வாதம் என்பதை அவளது தோற்றம் காட்டியது. அந்தத் தோற்றத்திலே கள்ளின் நெடி வீசியது. அது அவன் உள்ளத்தில் ஆயிரம் அழகு உணர்ச்சிகளை உண்டாக்கியது. அவன் ஒரு கவிஞன் அல்ல! அப்படியிருந்திருந்தால் தப்பும் தவறுமாக இரண்டு வார்த்தைகளையாவது உளறியிருப்பான் இக்காலக் கவிஞர்களைப்போல!

அவள் வண்ணத்தேரென அசைந்து வந்தாள். வார்த்தைகளை வென்றுவிடும் வருணிக்க இயலாத அழகின் அசைவுகள் அவன் இதயத்தை அசைத்துவிட்டன. விழிகள்... அவள்மேல் குத்திட்டு நின்றுவிட்டன. அருகே வந்த அவள், தன் இடுப்பிலிருந்த குடத்தை இறக்கி, சிலையின்மேல் தண்ணீரைக் கொட்டினாள். நீர் கொட்டியபோது அதில் மிதந்து கொண்டிருந்த மலர்களும் கொட்டின. அவள் அதனைப் பொறுக்கிச் சிலையின் மேல்வைத்தாள். போய் விட்டாள்.

கண்பொழுதிற்குள் கோயில் வாசலில் வண்ணக்கோலங்கள் அமைக்கப்பெற்றுவிட்டன. அதே நேரத்தில் முத்துக்குமரனின் உள்ளத்திலும் கோலங்கள் உருவாகிக் கொண்டிருக்கத் தவறவில்லை. ஆனால் அது வாசற்கோலத்தைப் போன்றதல்ல. இளமை உணர்ச்சிகள் என்ற பல நிறப்பொடிகளைக் கொண்டு ஏந்திழையரின் வாள் விழிகள் அமைக்கும் 'இதயக் கோலங்கள்' என்றுமே அழிவதில்லை.

அடிவானத்தில் நிறக்கூத்துக்கள் விரைவாக நிகழ்ந்துகொண்டிருந்தன. கிளைகளில் தூங்கிக் கொண்டிருந்த புள்ளினங்கள் சிறகடித்துப் பறந்தன. குடிசையிலிருந்து ஒரு முதிய குரலின் அழைப்புக் கேட்டது. குமரியும் பறந்துவிட்டாள்,

அவளிடம், அவன் தன் இதயத்தைப் பறிகொடுப்பதற்கு அந்த ஒரு நிகழ்ச்சியே போதுமானதாக இருந்தது. நாட்களின் ஓட்டம் அவர்களுக்குள் அன்பை விதைத்துவிட்டது. அவனிடம் அவள் உயிராக இருந்தாள், அவளையே மணந்துகொள்வதாக அவனும் உறுதியளித்துவிட்டான்.

இத்துணையும் நடந்துவிட்டதற்கப்புறம்தான், பேரிடி போன்ற அந்தச் செய்தி அவன் செவிகளுக்கெட்டியது. 'வெண்ணெய் திரளும் நேரத்தில் தாழி உடைந்ததுபோல' என்ற முதுமொழி, அவன் ஒருவனுக்காகவே காத்திருந்ததைப் போல மெய்யாகிவிட்டது.

வீதியில் நடந்துகொண்டிருந்த அவனை, சற்றுத் தொலைவில் கூடியிருந்த கூட்டம் ஈர்த்தது. அருகே சென்று பார்த்தான். ஒரு இளம் ஆடவன் தன் மனைவியை அடித்து உதைத்துத் துன்புறுத்திக்கொண்டிருந்தான். அருகே அவர்களுடைய குழந்தைகள் ஓலமிட்டுக் கதறிக்கொண்டு நின்றன. சூழ்ந்திருந்த ஊர் மக்கள் சண்டையைத் தடுக்க முயலாது வேடிக்கைபார்த்துக் கொண்டிருந்தனர், முத்துக்குமரனுக்கு ஆத்திரம் வந்தது, என்றாலும் ஒன்றும் புரியாதவனாய் அருகிலிருந்தவர்களிடம் செய்தி என்னவென்று கேட்டான். திடுக்கிட்டான்.

ஒரு குடம் பாலில் ஒரு துளி நஞ்சு கலந்துவிட்டதைப்போல அந்தக் கள்ளங்கபடமற்ற சிற்றூரில் 'பொது மகள்' ஒருத்தி எங்கிருந்தோ வந்து குடியேறியிருக்கிறாளாம். குடும்ப இளைஞர் பலர், அவள் மோகத்தில் சிக்கி அறிவிழந்து சொந்தப் பெண்டுபிள்ளைகளை அடித்துக் கொடுமைப்படுத்துவதுண்டாம். அத்தகையோரில் அந்த ஆடவனும் ஒருவனும்.

முத்துக்குமரனின் ஆத்திரம் மிகுந்தது. அவமானத்தால்அவன் உடல் குன்றியது. தொங்கிய முகத்துடன் சிறிது நேரம் சிந்தித்து நின்றான். பிறகு ஒரு முடிவுடன் நாட்டாண்மைக்காரர் வீட்டை நோக்கி நடந்தான்.

திண்ணையில் உட்கார்ந்திருந்த அவர், அவனைப் புன்னகையுடன் வரவேற்றார். அருகில் அமர்த்திக் கொண்டு செய்தியை விசாரித்தார். அவன், சற்று நேரத்திற்கு முன், தான் வீதியில் கண்டவற்றையும் கேட்டவற்றையும், வேதனையுடன் விளக்கினான். அதுபோன்ற 'தாழ்குடிமகள்' யாராவது ஊரில் இருப்பின், அத்தகையவளைச் சற்றும் தாமதியாமல் ஊரைவிட்டு வெளியேற்றும்படி கேட்டுக்கொண்டான்.

பொறுமையுடன் எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டிருந்த நாட்டாண்மைக்காரர் தனக்குள்ளாகவே ஏளனமாகச் சிரித்துக்கொண்டார். தொண்டையை மெதுவாகக் கனைத்துக்கொண்டு பேசினார்.

"நீ கூறுவது சரிதான் தம்பி! ஆனால் அவளால் யாருக்கும் எவ்விதத் தீமையும் உண்டாவதாக எனக்குத் தெரியவில்லை. குடும்ப இளைஞர்களுக்கு அறிவும் பொறுப்பும் இருந்தால் அவர்கள் கெடுவதற்குக்காரணமே இருக்கமுடியாது. ஏதோ பாவம்! அந்தப் பெண் ஒரு அனாதை! வெளியூர்க்காரி! கிழத்தாயுடன் நமது ஊருக்கு வந்து கண்ணீர் வடித்தாள். காப்பாற்றுவதுதானே மனிதத்தன்மை...!"

நாட்டாண்மைக்காரரின் பேச்சு முழுவதிலும் உட்பொருளும் நச்சுத்தன்மையும் கலந்திருப்பது முத்துக்குமரனுக்குப் புரிந்துவிட்டது. என்றாலும் அதைக்காட்டிக்கொள்ளாமல் கேட்டான்.

"...என்ன சொல்கிறீர்கள்? அனாதையா? வெளியூர்க்காரியா?...... யாரது?..."

"உனக்கு அவளைத்தெரிந்திருக்க முகாந்திரம் இருக்கமுடியாது. நீ ஊரைவிட்டு ஓடிப்போனதற்குப் பிறகு இங்கு வந்து சேர்ந்தாள். இப்போது பிள்ளையார் கோயில் நந்தவனத்தில் வசித்து வருகிறாள். கோயிலைக் கூட்டிமெழுகித் துப்புரவாக வைத்திருப்பது அவளது வேலை. அதற்கான சம்பளத்தையும் ஊரார் கொடுத்து வருகின்றனர்..."

அவர் பேசிக்கொண்டேபோனார். முத்துக்குமரனின் இரத்த நாளங்கள் வெடித்துவிடும் போலிருந்தன.

"பிள்ளையார் கோயில் நந்தவனத்தில் வசிப்பவள்! அதைக் கூட்டி மெழுகிக் கோலம் போடுபவள்! வெளியூர்க்காரி! அப்படியானால்...? ...? சே! அப்படியும் இருக்குமா? முடியாது! இருக்கமுடியாது! அது போன்ற ஒரு இழி மகளிடம் என் இதயம் பறிபோயிருக்கவே முடியாது..."

கேள்வியும் விடையும் ஒரே நெஞ்சிலிருந்து பிறந்தன. அங்கு அமைதி பிறக்கவில்லை. புயல் புகுந்து கொண்டது. உயிரற்ற சடலமாக உணர்ச்சியற்று வீடு திரும்பினன். அறையை மூடிக் கொண்டு இருளில் விழுந்தான். அங்கும் நாட்டாண்மைக்காரரின் குரலே ஒலித்துக்கொண்டிருந்தது.

நீண்ட நேரத்திற்குப் பின் எழுந்தான். பித்தனைப்போல வீட்டை விட்டு வெளியேறினன். வழக்கமாக அவளைச் சந்திக்கும் இடத்திற்குக் கால்கள் தானுகவே நடந்தன,

அங்கே அவள் காத்திருந்தாள். காதலனைக் கண்டவுடன் எழுந்தோடி வந்தாள். கனிவுடன் கரம் பற்றினள். ஆனல் அவனே வெறுப்புடன் அவளை உதறித் தள்ளினன். கனல் பறக்கும் விழிகளைத் திருப்பி வெறிப்பார்வையை வீசினன். அந்த வெம்மையில் அவளது கொஞ்சலும் மகிழ்ச்சியும் தூள் தூளாகின. ஒன்றும் புரியாதவளாய்க் கேட்டாள்.

“ஏன். எதற்காக என்மேல் இவ்வளவு கோபம்...?’’ மடையுடைந்த வெள்ளமென முத்துக்குமரனின் வசைமொழிகள் அவளைத் திடுக்கிட வைத்தன.

“மூடு வாயை! கேட்பதற்குப் பதில் சொல், முதலில்... உன்னைப் பற்றி நான் கேள்விப்படுவதெல்லாம் உண்மைதானு...?’’ அவள் தழுதழுத்த குரலில் பேசினுள்.

“என்ன கேள்விப்படுகிறீர்கள்...?’’

“வேறு என்ன. நீ ஒரு விலைமகள் என்றுதான்! கொடுப்பார் கைப்பாவை என்றுதான்! ஒழுக்கங் கெட்ட பரத்தை என்றுதான்!...’’

அவள் மறுமொழி கூறவில்லை. கண்கள் பொலபொல வென்று நீரைக் கொட்டின. தலைகவிழ்ந்து, வாயிழந்தவளாய்நின்றுள். அதைக் கண்டு அவன் ஆத்திரம் மேலும் அதிகரித்தது.

“நீலிக்கண்ணீர் வடிக்காதே மானமற்றவளே!... நயவஞ்சகமாக என் வாழ்வைத் தட்டிப் பறிப்பதற்குச் சற்றும் தயங்காதபேயே!... உன் போன்றோர் இவ்வுலகில் நடமாடவே கூடாது...... அந்த நற்பணிக்கு முதற்பலியாக உன்னையே ஒழித்துவிடுகிறேன்...’’

இவ்வாறு கூறிக்கொண்டே அவன் அவள் கழுத்தைப் பிடித்துத் தள்ளப்போனன். அத்துணைக்கும் அவள் பேசவேயில்லை. மாருக தன் தலையை அவன் பிடிக்கு இசைவாகக் கொணர்ந்தாள். அவன் செயலற்று நின்ருன்.

பயங்கரமான அமைதி நிலவியது. தலை நிமிர்ந்தாள் அவள். அமைதியைக் கலைத்துக்கொண்டு எதற்கும் துணிந்த குரலில் பேசினுள்.

“ஏன் தயங்குகிறீர்கள். தண்டனை அளியுங்கள்... ஆனல்... என் ஒருவனைத் தண்டிப்பதனுல் உங்கள் ஒருவரின் ஆத்திரம்தான் தணியும். சமுதாயம் சீர்திருந்திவிடாது. பார்க்கப்போனல் தண்டனைக் குரியவள் நான்கூட அல்ல. என் போன்ற எண்ணற்ற அறுதைப் பெண்களை வளைத்து ஒடித்து அவர்களின் வாழ்வைச் சூறையாடிய... இந்த மனிதக் கும்பல்தான்!... தாங்கள் எண்ணுவதைப்போல நான் ஒரு இழிமகள் அல்ல! எல்லோரையும் போலத்தான் பிறந்தேன். வளர்ந்தேன். எல்லோரையும் போலத்தான் வாழவும் விரும்பினேன். இன்றும் வாழ விரும்புகிறேன்... ஆனல்...? சீர்திருத்தங்கள் எல்லாம் சொல்லளவுடனேயே அடங்கிவிடும் இந்த உலகில் அது நிறைவேறுவதேது? உலகில் பிறந்துவிட்ட எந்த ஒரு பெண்ணும், விபசாரியாக வாழ விரும்புவதில்லை. பெண்மையின் விளக்காகவே வாழத்துடிக்கிருள். ஆனல் அந்தத்துடிப்பை எவர் மதிக்கின்றனர்? தங்கநிற ரோஜாவானுலும், காட்டுத் தடத்தருகே முளைத்துவிட்டால், அது எருமையின் காலடிகளுக்குத்தானே இரையாகிப் போகின்றது...’’

அவன் இடைமறித்தான்.

“அளக்காதே!... அவ்வளவு தூய்மையுள்ளவளாக இருந்திருந்தால் இந்த வாழ்க்கைக்கு நீ துணிந்திருப்பாயா?...’’

“என்ன செய்வது! வயிறு என்று ஒன்றிருக்கிறதே! அது தானே என்போன்றோரைக் கவிழ்த்துவிடுகின்றது! பாலும் பழமும் உண்டு ஏப்பம் விடுவோரின் வாயிலிருந்து உதிரும், பண்பு ஒழுக்கம் என்ற அழகான சொற்கள் எல்லாம் எங்கள் வயிற்றுத் தீயைத் தணித்துவிடுவதில்லையே! இல்லாமையும் வறுமையும் கோரக் கொலைகளையும், துரோகச் செயல்களையும் செய்யத் தூண்டிவிடும் போது; கேவலம் இந்த ஒழுக்கமும் பண்பாடும் எந்த மூலைக்கு?...... வேண்டுமானல் பட்டினியற்ற ஒரு சமுதாயத்தை நிறுவிப்பாருங்கள், அங்கே ஒழுக்கக்கேடுகள் தலை காட்டுகின்றனவா பார்ப்போம்!...’’

முத்துக்குமரனின் ஆத்திரம் வீழ்ந்தது. அறிவு விழித்துக் கொண்டது. இரங்கிய குரலில் கேட்டான். “......அப்படியானல் வயிற்றுக் கொடுமைக்காகவா வழி தவறிய வாழ்க்கைக்குத் துணிந்தாய்...?...?’’

அவள் எதுவும் பேசவில்லை. மீண்டும் தலையைக் குனிந்து கொண்டாள்.

சற்றுத் தொலைவில் ஒரு நாய் கீழே கிடக்கும், எலும்புத்துண்டுக்காகத் தான் பெற்ற குட்டியிடமே சண்டையிட்டு அதை விரட்டிக் கொண்டிருந்தது. அப்போது மற்றொரு மூலையிலிருந்து வேறொரு நாய் பாய்ந்துவந்தது. சதைப் பிடிப்பே சிறிதும் அற்ற அந்தக் கேவலமான எலும்புத் துண்டுக்காக மூன்று நாய்களும் சண்டையிட்டுக் கொண்டிருந்தன.

அவள் போய்விட்டாள். அவனும் சூடுபெற்ற பூனையைப்போலத் திரும்பினன். சிந்தனை அவன் மண்டையைக் குழப்பியது.

[அடுத்த இதழில் முடியும்]


# “முரசு”

(முற்போக்கு இதழ்)

அரசியல் கட்டுரைகளும்,
இனிய கதைகளும், கவிதைகளும்;
கழகச் செய்திகள்;
கலையுலகச் செய்திகள்,
ஆகியவைகளைத் தாங்கி

ஜூன் 5-ம் நாள்
வெளிவருகிறது.

“முரசு” அலுவலகம்,
த. பெ. எண். 1383, கொழும்பு.

# பெற்றபெண்ணைக் கொடுப்போமா?!

[ நாஞ்சில், ஆ. ஆரிது ]

பறவைகள் தத்தம் அகம் நோக்கிப் பறந்தன. கறவைகள் கன்றுகளோடு புகலிடந் தேடின. மறவர்கள் வீடு நோக்கி நடை பயின்றனர். துறவியரும் தம் மோனப் பெருவெளி வேடம் கலைத்து உலக இன்பந்துய்க்கப் புறப்படலாயினர். -ஆமாம்-ஆதவன் தன் அன்றைய அலுவலின் இறுதிச் சடங்காக எல்லோரிடமும் விடை வாங்கிக் கொண்டிருந்தான், மலை முகட்டின் பின்புறம் ஒளிந்திருந்த தன் காதலியைப் போய்ச் சேருவதற்காக!

அந்த மாலை மயங்கும் நேரத்தில், மானொன்றைப் பின் தொடர்ந்தோடி ஏமாற்றத்தை அணைத்தவனாகத் திரும்பிக்கொண்டிருந்தான் வேட்டையாட வந்திருந்த ஒரு அரசன்.

தள்ளாடித் தள்ளாடி நடந்து வந்த அரசன் திடீரென்று நின்றான். அவனைத் தழுவியிருந்த சோர்வு சொல்லிக் கொள்ளாமல் ஓடியது. நீர் வேட்கை மிகுந்திருந்த அவன் நாவில் நீர் சுரந்தது. வாடிய அவன் முகம் மகிழ்ச்சியில் கூடியது..... ஏன்?

அங்கொரு பெண்ணைக் கண்டான் அவன். மானொன்றைத்தேடி-ஓடிய அவன் மடமான் ஒன்றைக் கண்டான், அவள் அழகினை உண்டான், சிந்தை களி கொண்டான்.

அவனோ மன்னன், அவளோ வேடுவர் குல மங்கை! இருப்பினுமென்? இம்மாதிரி நேரங்களில் இந்தப் பாகுபாடுகளுக்கெல்லாம் இடமேது? கவர்ந்தது பெண்; கவரப்பட்டது ஆண், இந்த இயற்கையின் நியதிக்கு முன்னே செயற்கைச் சடங்குகளெல்லாம் தளர்ந்து விடுவது இயல்புதானே! அந்த மனோகரியை மணம் செய்து கொள்ள வேண்டுமென்ற திட எண்ணத்தோடு மன்னன் விடுதி சேர்ந்தான்.

வேலெடுத்தான்; தன் மேனியிலேயே குத்திப்பார்த்தான்; வலிக்கவில்லை, அந்த வேல்விழிகள் ஏற்படுத்திய புண் அதிகமாக வருத்திய காரணத்தால்.

மதுவருந்தினான்; மனம் நிறையவில்லை, அவன் மதியும் மயங்கவில்லை. அந்தச் சிங்காரச்சிலை அவன் உணர்வில் ஒன்றியே ஒளிர்ந்தது. இரவு முழுவதும் இந்த வேதனை.

பகலவன் எழுந்தான்; மன்னன் தூதுவனை வேடர்களிடம் அனுப்பினான் பெண் கேட்க. வேடுவர்கள் விவரமறிந்தனர். தங்கள் தலைவனிடம்-அந்தப் பெண்ணைப் பெற்றவனிடம்-அவனை அழைத்துச் சென்றனர். வேடர்கோன் சிந்தித்தான். மணம் விரும்பித் தூதுவனை அனுப்பியிருப்பவன் மன்னனாயிற்றே என்றவன் மருண்டானில்லை. சிந்தித்தான். தான் பெற்ற பெண்ணைத் தருவதற்கில்லை என்று மறுத்தும் விட்டான்.

"மன்னனுக்காக மணவோலை ஏந்திவந்த தூதுவனே கேள்!"

"கைப்பிடித்த தன் மனைவியைப் பிறிதொரு நேரத்தில் தன் சுய நலத்திற்காக விற்றானே பண்டு, அரிச்சந்திரன் என்றொரு மன்னன்; அவன் யார்?!"

"எத்துணை இடர் வந்தெய்திய நேரத்திலும், தன் கணவன் துணையொன்றையே பெருந்துணையாகக் கொண்டு, தான் பெற்ற மக்களையும், தன்னைப் பெற்ற பெற்றோரையுந் துறந்து மணாளனோடு ஒன்றியிருந்த நேரத்தில், அவள் துகிலிலும் பாதியை எடுத்துக்கொண்டு, காரிருளில் கானகத்தில் கைவிட்டு ஓடிய காதகன் நளன் யார்?

"தன் கையாலாகாத் தனத்தினால் சீதையை இராவணனிடம் பறிகொடுத்துவிட்டு, கடன் கொடுத்தார் நெஞ்சம்போல் கலங்கினானே தசரதன் மைந்தன்; இராமன், அவன் யார்?

"சூதாட்டத்தில் தம் உடைமை எல்லாம் இழந்துவிட்டு இறுதியாகத் தம் மனைவியையும்-ஆம்! ஐவருக்கும் பத்தினியையும் இழந்துவிட்டு அவள் ஆடைகள் அகற்றப்பட்டு மானபங்கப்படுத்தப்பட்ட நேரத்தில்,-ஐயயோ வெட்கம்! வெட்கம்!!-அதைப்பார்த்துக்கொண்டிருந்த ஐந்து மன்னரும் யாவர்?!"

"இவர்களின் வழிவந்தவன் தானே உன் மன்னவனும்; இவன் மாத்திரம் தன் மனைவியை வாழவைப்பான் என்பது என்ன நிச்சயம்? எனவே, தூதுவனே 'மணம்' என்று கூறினாயே, அந்த வாயை உமிழ்ந்துவிடு! நீ ஏந்திவந்த ஓலையைக் கிழித்து காற்றில் உருட்டிவிடு!" "தூதுவனே இன்னுங் கேள்!"

உங்கள் மன்னர் வணங்கி வழிபடும் சிவபெருமானார், எங்கள் குலத்துதித்த கண்ணப்பன் உண்டு உமிழ்ந்த எச்சிலை விரும்பி உண்டவர். எங்கள் எச்சிலை விரும்பியுண்ட ஒருவனுக்கு நீங்கள் அடிமைகள். எங்கள் எச்சிலை விரும்பி உண்ட காரணத்தினால் தான் அவன் பெற்ற குமாரன் வேலனுக்கு நாங்கள் ஒரு பெண் கொடுத்தோம். அதுகூட எங்கள் சொந்தப் பெண்ணல்ல; வளர்ப்பு மகள். ஆமாம்-வள்ளி எங்கள் வளர்ப்பு மகள்தான். அப்படியிருக்க உங்கள் அரசனுக்கு நாங்கள் பெற்ற பெண்ணைக் கொடுப்போமா? தூதுவனே! போ! போய் இதையும் அரசனிடங் கூறுவாயாக!

ஆளுபவனாயினும், அந்த ஆண்டவனே ஆயினுஞ்சரி, எவரிடத்திலும் தாம் கொண்ட கருத்தினைச் சற்றுந் தயக்கமோ மயக்கமோ இல்லாது வெளியிடும் தனிப்பெரும் பண்பினைக்கொண்டு வாழ்ந்த அன்றைத் தமிழர்கள் நிலையை அப்படியே அப்பட்டமாகப் படம் பிடித்துக் காட்டுகிறது இந்தப் பழந்தமிழ்ப் பாடல். சொன்னயமும், பொருணயமும், நடை நயமும், தொடர்ந்த மற்றென்னயமும் நன்னயமாய்க் கொண்டிலங்குகின்ற அந்தப் பாடலைப் பார்ப்போம்:

**விற்றதார்? கலை பாதியோடுவனத்திலேயற**
**விட்டதார்? வெஞ்சிறைபுக விட்டதார்?**
**உரியவிட்டு விழித்ததார்? [துநில்**
**உற்றதாரமும் வேண்டுமோ? யினி மன்னர்**
**[பெண்கொளல்**
**ஒக்குமோ? உமியடா மணம் என்றவாய்!**
**ஓலைகாற்றில் உருட்டடா! [கிழித்(து)**
**வெற்றியாகிய முத்திதந்திடும் வெங்கை**
**[மாதநர்**
**வேடர்யாம் விமலரானவர் எமை அடுத்**
**எங்கள் எச்சில் மிசைந்ததால் [தினி(து)**
**பெற்றவேலன் தமக்குயாமொரு பெண்**
**[வளர்ப்பினில்**
**ஈந்தனம்! பெற்றபெண்ணைகொடுப்ப**
**போய்படித்திடு தூதனே! [மோ? இதைப்**

❋

# கனவோடு சரியா?

[செல்வன் ஓர் ஆரம்ப ஆசிரியர், சகுந்தலா செல்வனின் இன்ப மனையாள், இராசன் இருவரின் அன்பில் உதித்த மகன். இவர்களின் வாழ்வில் ஒரு நாள்.......]

[செல்வன் பொழுது விடிந்தும் படுக்கையை விட்டு எழாவண்ணமிருக்கையில்...]

சகுந்தலா:- அத்தான் அத்தான்! என்னத்தான் இன்னும் தூங்குகிறீர்கள்?

செல்வன்:- (புரண்டு படுத்து) உழைப்பின் கஷ்டம் உனக்கெப்படித் தெரியும், சகுந்தலா! வேலை தான் நாற்காலியில் அமர்ந்து கொண்டே செய்வதாயிருந்தாலும், உலகத்தின் மூலை முடுக்குகளெல்லாம் தெரிந்து மூளைக்கு முழுவேலை கொடுத்து உயிரை விடணும் தெரியுமா? வாத்தியார் உத்தியோகம் வெறும் சட்டம் தீட்டும் உத்தியோகமல்ல...யோசித்துப் பார்த்தால்தான் தெரியும்...தயவு செய்து தொந்தரவு செய்யாமல் உன் வேலையைப்பாரு.

சகுந்:- ஆமா, உத்தியோகத்தைப் பற்றிப் பெருமையாப் பேச உங்களைவிட யார் இருக்கப் போறுங்க, சம்பளம் வந்தது அல்லது வரவில்லையென்று ஒரு வார்த்தை சொல்றதில்லே, வண்ணான் கணக்கு முடிக்கலே, வாடிக்கையா வாங்கும் விறகுக் கடனும் தீர்க்கலே, பால்காரியோ பணம் கேட்காத நாளில்லே. என்னத்தான், நான் சொல்வது காதில் விழவில்லையா...? பள்ளிக்கூடம் போகவும் நேரமாச்சு, பக்கத்துத் தெருப் பாலசுப்ரமணியனெல்லாம் இப்ப வரப்போறுங்க, போங்க, வந்து பார்த்தா, அவுங்க வாத்தியார் இலட்சணம் தெரியப்போவுது... வாத்தியாரே இப்படியென்றால், அவரிடம் படிக்கும் பிள்ளைகள் எப்படியிருப்பார்களென நல்லாத் தெரியும், எழுந்திருங்கத்தான்.

[சகுந்தலாவின் சலசலப்பால் கண் திறந்த செல்வன், படுக்கையில் அமர்ந்து கொண்டு].

செல்:- என்னடியம்மா! இன்றைக்கு அவசரம் வந்தது, காலையிலே ஆலைச் சங்குமாதிரி...

சகுந்:- போதும், போய், குளியுங்க நேரம் போய்க்கிட்டேயிருக்கு.

[இட்ட கட்டளையைத் தட்ட முடியாத செல்வன், காலை வேலையெல்லாம் முடித்துவிட்டு]

செல்:- ஆமா, குழந்தையெங்கே?

சகுந்:- உங்க பிள்ளைதானே, உங்களைவிடக் கொஞ்சம் அதிகமாத் தூங்கிறான், எதுக்கு?

செல்:- இல்லே, காலையிலேயே நாடகம் ஆரம்பிப்பானே, எங்கே

**பி. எஸ். மணி**

ஆளைக் காணும்னு பார்த்தேன்; வருங்கால வாத்தியாரு இப்படித் தூங்குறாரு.

சகுந்:- (சமையல் கட்டில் வேலை பார்த்துக் கொண்டிருந்த சகுந்தலா ஆத்திரமும், அவசரமும் கலந்து ஓடி வந்து) என்னது வருங்கால வாத்தியாரா...? அத்தான், போயும் போயும் இந்த வாத்தியாரு உத்தியோகத்தையா எங்கண்ணு செய்யப் போறான்னு சொல்றீங்க, அந்த உத்தியோகம் உங்களோடவே இருக்கட்டும். இராசனையும் பிடிக்கவேண்டாம், காலையிலே அதுவும் வெறும் வாயிலே என் இராசாவைப் பார்த்து வாத்தியாருன்னு சொல்றீங்களே!

செல்:- சகுந்தலா, உன் மகன் கலெக்டராகவே வரட்டும், நான் வேண்டாமென்று தடுக்கலே; வா, வா, ஏதாவது கொடு, எனக்கு நிறைய வேலையிருக்கு... வாங்கிற சம்பளம் வயிற்றுக்குப் பத்தலே மகன் கலெக்டராகணும்னு வேற நினைப்பு...

[காலைச்சாப்பாடுகொணர்ந்து வைக்கிறாள் சகுந்தலா]

சகுந்:- வேலைமட்டும் நிறைய இருக்குன்னு சொல்றீங்க, ஆனால் சம்பளம் மாதம் முடிஞ்ச உடனே பொத்தென்று கைமேலே வந்து விழுதுபாருங்க, நிறைய வேலையிருக்க வேண்டியதுதான்.

செல்:- என்னடியம்மா! பழைய சாதத்தை வைச்சிருக்கே..... நானும் எத்தனை நாளைக்குத்தான் இந்தப் பாழாப்போன பழையதையே சாப்பிடுவது...... ஒரு தோசை, இட்லி, உப்புமா ஏதாவது இருந்தா பரவாயில்லை...

சகுந்:- என்னை வலியச் சண்டைக்கு அழைக்கிறீங்க, வாடிக்கையா வாங்கிற விறகுப் பாக்கி தீரலே, வண்ணாங் கணக்கு வழக்கம்போல அப்படியேயிருக்கு, பாற்காரி பாக்கியைத் தீர்க்காமே பகலுக்குப் பத்துத் தடவை வந்திட்டுப்போறா.....

இந்தக் கவலையெல்லாம் விட்டுட்டு உங்களுக்கு இட்லி, தோசை ஞாபகம். இந்த வாரத்திலிருந்து வண்ணானை நிறுத்திடப் போறேன்; பாலுங்கூட வேண்டாம். என்னாலே உபத்திரவம் பொறுக்கமுடியலே.

செல்:- (பெரிய பெருமூச்சு விட்டு) ம்... மதியத்திலே இருந்த தயிரும் நிக்கப்போவுது, இனித் தினமும் புளிரசத்திலே நீந்த வேண்டியதுதான். (என்று முடித்துவிட்டு, சலிப்புடன் உணவருந்தும்போது மகன் இராசன் தூங்கம் கலைந்து வருகிறான், சகுந்தலா ஓடிபெடுத்து உச்சி முகர்ந்து...)

சகுந்:- என்னடா இராசா!... தூக்கம்முடிஞ்சுதா?...இதோ அப்பா .........

செல்:- வாடாப்பா, வருங்கால கலெக்டர், உங்கம்மாவிற்கு வாத்தியாருன்னாவண்டாஇராசா கோபம் வருது, கேளு...

இராசன்:- அப்பா, நான் வாத்தியாராவந்து அம்மாவை அடிப்பேன்.

செல்:- பார்த்தையா சகுந்தலா.

சகுந்:- இராசா... இல்லேன்னு சொல்லு, எங்கண்ணல்லப்பா... நமக்கு இந்த உத்தியோகம் வேண்டாம்இராசா...கூலிவேலை செய்தாவது காலம் கழிக்கலாம்.

செல்:- என்னடி, ஒரேடியா கேலி செய்யறே, ஆசிரியர்களுக்கெல்லாம் நம்ப நாட்டிலேதான் குடிக்கக் கஞ்சி கிடையாது. ஆனால் உண்மையிலேயே இதைவிடப் பொறுப்புவாய்ந்த தொழில் வேறு எதுவுமே கிடையாது... பொறு எங்களுக்கும் நல்லகாலம் வராமலா போயிடும்?

சகுந்:- போங்கதான், நீங்களும் சொல்லிக்கிட்டேதான் இருக்கிறீங்க, நாட்களும் போய்க்கிட்டே இருக்குது. மாதாமாதம் கூட்டம் தவர்றதில்லே, இதுக்கு இடையிலே மகாநாடுந்தான் கூட்டுறீங்க, மந்திரிகளும் வந்திட்டு, வந்திட்டு வாழ்த்துக் கூறிட்டுப் போறாங்க, ஆனால் வயிறு நிறைஞ்சபாடில்லே, நல்லகாலம் வருது, வருதுன்னு வாயிலேயே சொல்றீங்களே தவிர, வந்தபாடுமில்லை, அத்தான்! இந்தக் காலத்து வாத்தியாருங்களுக்குப் பெண் கொடுப்பதே தப்புதான்ங்கிறது இப்ப எனக்கு நல்லாப்புரியுது.

செல்:- சகு! எப்படியிருந்தாலும் எங்களை அரசாங்கம்கைவிடாது. எங்க சமுதாயத்தை (ஆசிரியர் சமுதாயம்) தவிக்கவிட்டா ......அப்பறம் சொல்ல என்ன இருக்கு... பேச்சிலேயே போயிட்டிருக்கேன், இன்று விடுமுறையாயிருந்தும் வீடு தங்கமுடியலே, எனக்கு முக்கியமான வேலையிருக்கு சகுந்தலா.

சகுந்:- அப்படியென்ன வேலை?

செல்:- சம்பளத் தகவலை, அறிகிறதைவிட முக்கியமான வேலை வேறு என்னயிருக்கு? என்னை எதிர்பார்த்திட்டு சாப்பிடாமே வழியைப் பார்த்திட்டு இராதே. வந்தாலும் வராவிட்டாலும் இராசனும் நீயும் சாப்பிடுங்க.

சகுந்:- நாங்க சாப்பிடுறோம், நீங்க மட்டும் கொஞ்சம் நேரத்தோடு வீடுவந்து சேருங்க. வழியிலே இருக்கிற பெட்டிக்கடை தவறாமல் ஞாபகம் சொல்லிட்டு வராதீங்க, வேலை முடிஞ்சா வீடு வரணும்,

செல்:- சகுந்தலா, இன்று தலைமை ஆசிரியரைக் கண்டு சம்பளம் ஏதாவது... பிரச்சனை உண்டுமான்னு விசாரிச்சிட்டு வர்றேன், அதோடு நம்ப நாராயணசாமி வீடுவரை போயிட்டுச் சீக்கிரம் திரும்பி...

சகுந்:- அப்படி ஏதாவது சம்பளம் வந்தா, வரும்பொழுது இராசாவுக்கு...

செல்:- என்ன சகுந்தலா அப்படிச் சொல்றே, சம்பளம் மட்டும் வந்திருந்தா, என் இராசாக்கண்ணுக்கு பொம்மை, மிட்டாய் இதெல்லாம் வாங்கி மலையா குவிக்கக் கேட்கணுமா?

**[சகுந்தலாவைக் குளுமையாகப் பார்த்து]**

ஏன் சகு, உனக்கு ஏதாவது வேண்டாமா?...... சொல்லேன் வாங்கிவாறேன்,

சகுந்:- வழக்கம்போல் வாங்கி வருவீர்களே!

செல்:- எது?

சகுந்:- அதுதாங்க, 'பொரிகடலை'

செல்:- ஓகோ, அதுவா, அதைவிட வேறு என்னவேண்டும் உனக்கு? நான் 400 சம்பாதிக்கிற நபரா, சொல்லவே வெட்கமாயிருக்கு 65 ரூபாய். அதைக்கொண்டுதானே சகுந்தலா... ஏன், பொரிகடலை மோசமா?... அல்லது...

சகுந்:- போதும், போதும், ஏதையோ வாங்கிட்டு வாங்க... நானும் உங்க மனதறிந்தவள் தானே, "பாதாமல்வா"வா கேட்பேன்? நீங்கள் ஏது வாங்கிவந்தாலும் வராவிட்டாலும், விரைவாக வீடு வந்தாலே எனக்கு போதும்.

**[செல்வன் செல்கின்றார், சகுந்தலா மதிய உணவு சமைப்பதில் மும்முரமாக ஈடுபடுகிறாள், இராசன் தன் சகாக்களுடன் விளையாடத் தொடங்கிவிட்டான்.]**

**[எதிரே தபால் சொக்கலிங்கத்தைக் கண்ட செல்வன்]**

செல்:- என்னப்பா, சொக்கலிங்கம் ஏதாவது தபால் வந்திருக்கா, சம்பளச் சமாச்சாரமே தெரியலேயே.

தபால்:- ஏதோ தபால் ஹெட்மாஸ்டருக்கு இருக்குதுங்க.

செல்:- அப்படியா, வா, வா, நானும் அங்குதான் போறேன்.

தபால்:- செல்வன் சார்...!

செல்:- என்னப்பா?

தபால்:- அன்றைக்கு வாங்கின கார்டுக்கு காசு கொடுக்கலீங்களே...

செல்:- (சமாளித்து) ஆமாப்பா சொக்கலிங்கம், மறந்தேபோயிட்டேன், அதுக்குத்தான் சம்பளத்தை எதிர்பார்த்திட்டிருக்கேன், என்ன செய்ய, நிலைமை அப்படி...!

தபால்:- கொஞ்சம் சீக்கிரம் பாருங்க, அன்றைக்கு என்னுடைய சொந்த "பாக்கட் மனி"யைப் போட்டுப்போஸ்ட்டுமாஸ்டருக்குக் கணக்கு ஒப்பிச்சேன் சார்......

**[பள்ளிக்கூட வராண்டாவின் முன்பக்கம், தலைமை ஆசிரியர் ஜான் தினகராஜ் ஈச்சேரில் அமர்ந்து தினத்தாள் படித்துக்கொண்டிருக்கிறார்]**

செல்:- வணக்கம் சார்.

த. ஆசி:- வாங்க மிஸ்டர் செல்வன்...உட்காருங்க, என்ன விடுமுறையிலே கூட பள்ளிக்கு?

செல்:- சம்பள விஷயமா ஏதாவது தகவல் தெரிஞ்சுபோக வந்தேன்.

**[தபால்காரன் கடிதம் கொடுத்துவிட்டு அறிந்த**

**தெருவிற்குப் போகிறான்; வந்த கடிதத்தைக் கண்ணாடியணிந்து துல்லியமாய்ப் பார்க்கிறார் தலைமை ஆசிரியர்]**

த. ஆசி:- மிஸ்டர் செல்வன், அன்று நமது ஆசிரியர் சங்கத்திற்கு அனுப்பியிருந்தார்களே!

செல்:- எதுங்க...?

த. ஆசி:- அதுதான் மிஷ்டர் "பள்ளிச் சீரமைப்புத் திட்டம்" அதற்கு நன்கொடை வசூலிக்க வேண்டுமாம், இதை இவ்வளவு பத்திரமா அனுப்பிச்சிருக்காங்க.

செல்:- (முகம் கருத்து) அப்படியானால் சம்பளம் எப்பத்தான்சார் வரும்?......வீட்டின் முன் கடன்காரனுங்க மகாநாடே நடத்திடுவானுங்க...மாதாமாதம் ஒழுங்காவாவது வந்து தொலைச்சாத் தேவலை...ம்...சார்,சீக்கிரமா இந்தத்தொழிலைவிட்டுவிலகஉத்தேசித்திருக்கேன். எத்தனை நாளைக்குத்தான் மனுஷன் குடும்பத்தோடு கஷ்டப்படுவது, மானமிழந்து வாழ்வது?

த. ஆசி:- என்ன மிஸ்டர் செல்வன், நீங்கள் இளைஞர், நீங்களெல்லாம் பள்ளிக்கு வந்த பின்னர்தான் பிள்ளைகளின் தின எண்ணிக்கை-குறையாமல், தவறாமல் இருக்கு. எல்லா வகுப்பு மாணவர்களுக்கும் நீங்களென்றால் உயிர். நன்றாகப் பாடுகிறீர்,எழுதுகிறீர்,கதை, கட்டுரை, பாடல்களெல்லாம் அழகாகப் படைக்கின்றீர்கள். குழந்தைகளுக்கு விதவிதமான விளையாட்டுகளும், புத்திபுகட்டும் நீதிக்கதைகளும், அறியாமையைப் போக்கும் அறிவு செறிந்த-நல்ல கதைகளையெல்லாம் சொல்லுகின்றீர், உம் போன்ற நல்ல-ஆசிரியரைப் இப்பள்ளி இழந்துவிட்டால் எப்படி......? பொறுங்கள் காலம் வரும், நாமும் கஷ்டமில்லாமல் வாழலாம். என் மகன் தாஸ், தாசில்தார் ஆபிசிலே அட்டண்டரா இருக்கான், உங்களுக்குத்தான் தெரியுமே... அவன் ஏதோ கொஞ்சம் சம்பளம் வாங்கிக் கொடுத்து உதவலே! எம்பாடும் உங்கமாதிரி...! ஏதாவது கைச்செலவிற்கு வாங்கிச் செல்லுங்களேன் அம்மாவிடம்.

செல்:- வேண்டாம் சார்..., ஏற்கனவே அம்மாவிற்கு எட்டு ரூபாய் தரவேண்டும், இன்னும் வாங்கினால் கஷ்டத்தில் முடிந்துவிடும். அப்ப வர்றேன் சார், வணக்கம்.

**[செல்வன் புறப்படுகிறார்... நடக்கும் பொழுது சகுந்தலாவின் ஆசைமுகம் தோன்றுவதுபோல்...... ஏதோ நினைத்துக் கொண்டு நடக்கின்றார், இடையிடையே இராசனின் நினைவும் வந்து]**

உம்......வீட்டில் மகன் வழி பார்த்துக் கொண்டிருப்பான். சகுந்தலாவும்......!

**[செல்வனின் கால்கள் அறியாமலே காந்தி பார்க்கை நோக்கி-நடந்தன, அங்கு ஓரிடத்தில் அமர்ந்திருக்கிறார்]**

இராசன்:- அம்மா! அப்பா வரலேயம்மா, எங்கேம்மா போயிருக்காரு?

சகுந்:- இன்றைக்குசம்பள நாளாம்; அதனாலே சந்தைக்குப் போயி, உனக்கு லட்டு, மிட்டாய், பிஸ்கட், பொம்மை இதெல்லாம் நிறைய வாங்கிகிட்டு வரப் போயிருக்காரு.

இராசன்:- அம்மா, அப்ப நானும், அப்பா வந்த பின்னாடி சாப்பிடுக்கிறேன், நீ சாப்பிடு.

சகுந்:- அடே போக்கிரிப்பயலே,... நான் அத்தான் வந்து...இல்லே அப்பாவந்து சாப்பிடுகிறேன். நீ கொஞ்சம் சாப்பிடுகண்ணு (ஊட்டுகிறாள் வெளியில் யாரோ கூப்பிடும் சப்தம் கேட்டு) அடடே! பால்கார அம்மாவா வாங்க, வாத்தியார் இன்னம் வர்லே, வந்த உடனே உங்க பணத்தை எடுத்து வைக்கிறேன், சாயந்தரமா வாங்க,

பால்:- சரியம்மா, (போகிறாள்)

செல்:- (தனிமையில்) உம்...! என்ன உலகம், வாழ்வதா சாவதா என்ற இரண்டு எண்ணத்தைத் தவிர மனதில் வேறு என்ன நினைப்பு வரும்? உலகில் பிறந்து இந்த ஆசிரியரின் உத்தியோகம்எடுத்த இலட்சணமோ என்னவோ. பிச்சைக்காரனைவிட நாலு வீதி நயமாகக் கேட்டு நாளைப் போக்குகின்றான். என் வாழ்வில் அந்த நிம்மதி கூட இல்லை. இதற்கிடையில் மனைவி, மகன். பேசாமல் ஏதாவதொரு வியாபாரத்தை ஆரம்பிக்கலாமென்றால் பொருளாதாரம் நம்மிடம் இல்லை.

**[இந்தச் சமயத்தில் "ஆசிரியர் பணி அறப்பணி, அதற்கே உன்னை அர்ப்பணி" என்ற பாடலின் மெல்லிய சத்தம் செல்வனின் காதில் விழுகின்றது ...இதைக் கேட்டதும் ஏதோ வாய்க்குள் முணுமுணுக்கிக்கொண்டு, வீட்டின் ஞாபகத்தில் புறப்படுகிறார்.**

**வீட்டில் சகுந்தலா வழிமேல் விழிவைத்துக் காத்திருக்கிறாள்... செல்வன் வரும் காட்சி கண்டு மனதிற்குள் மகிழ்ந்து]**

சகுந்:- வந்துவிட்டீர்களா, எவ்வளவு நேரமா காத்திட்டிருக்கேன். சாப்பாடே ஞாபகம்வரவில்லையா? அல்லது பழையது சாப்பிட்ட கோபமா, என்னத்தான் சோர்ந்திருக்கின்றீர்கள்?

செல்:- சகு! எங்கே இராசன்?

சகுந்:- இப்பொழுதுதான் தூங்க வைத்தேன். அப்பா, அப்பான்னு உயிரை எடுத்திட்டான் போங்க.

செல்:- கடன்காரர்கள் யாராவது வந்தார்களா?

சகுந்:- வந்தார்கள்...!

செல்:- என்ன சொன்னே?

சகுந்:- இன்றுதான் சம்பளம் வாங்கப் போயிருக்கிறாரு என்றேன்... ஏன்?

செல்:- (சிறிது கோபமாக) நீ சொல்லி அனுப்பிட்டே, இனி நானல்லவா அழுது தொலையணும்...... என்ன குடும்பம்...... என்ன...

சகுந்:- என்னத்தான் கோபமாப் பேசுறீங்க, நான் என்ன செய்வேன்.

**[இந்தச் சந்தர்ப்பத்தில் இராசன் எழுந்து வருகிறான்]**

செல்:- வந்துட்டியா, பெரிய சீமான் வீட்டுப்பிள்ளை.

இராசன்:- அப்பா, நீங்க வரலேன்னு அம்மா எனக்கு சாப்பாடு தரலேப்பா...

சகுந்:- இராசன், பொய்பேசாதே, உங்கப்பா சம்பளம் வராத கோபத்தையெல்லாம் பொட்டலம்கட்டிவீட்டுக்குக்கொண்டுவந்திருக்கிறார். நீ வேறு அதையிதைச் சொன்னே, அப்புறம் என்னைக் கொன்றிடுவார் உன் அப்பா.

செல்:- (கோபம் சிறிது அடங்கியவனாய்) சகுந்தலா!... கோபமா?

சகுந்:- இல்லே சந்தோஷந்தான். ஏந்தானப்படி உங்க மனம் மாறி மாறிப் பேசுதோ... சம்பளம் வரவில்லையானல் போகிறது. வருபவர்களுக்கெல்லாமே நானே பதில் சொல்லி அனுப்புறேன்.

இராசன்:- அப்பா, இன்றைக்கும் சம்பளம் வர்லேயா?... அப்பா, இந்தச் சம்பளம் ரொம்பமோசம், நானும் அம்மாவும் ஏமாந்து ஏமாந்து போரோம்... இனிஅது வரட்டும் அப்புறம் சொல்றேன். (என்றவாறே விளையாட ஓடுகிருன்)

[யாரோ ஒரு பையன் கையில் கடிதத்துடன்]

பையன்:- சார்! சார்!!

சகுந்:- அடடே நல்லசாமியா?...... (கூட்டிச் செல்கின்ருள்)

நல்லசாமி:- வணக்கம் சார்.

செல்:- வாடாப்பா ஐந்தாம் வகுப்புத் தலைவரே, என்ன விசேஷம்?

நல்ல:- ஹெட்மாஸ்டர் இந்தக் கடிதத்தைக் கொடுத்துப் பதில் வாங்கிட்டு வரச்சொன்னருசார் (கடிதத்தைக் கொடுக்கிருன்)

சகுந்:- என்ன கடிதமத்தான்?

செல்:- (ஏதோ பதில் எழுதிக் கொடுத்துவிட்டு)சகுந்தலா,கேட்டியா சங்கதியை, "பள்ளிச் சீரமைப்புத் திட்டம்" என்ற புதிய திட்டத்திற்கு நன்கொடை இன்றைக்கே வசூலிக்க முற்படுங்க என்று ஹெட்மாஸ்டர் உத்தரவு அனுப்பிச்சிருக்காரு.

சகுந்:- (கோபம்பொங்க) இதுவேறு உபத்திரவமா? தூக்கிஎறியுங்க... கொடுக்கிற சம்பளத்திற்கு இதுவும் செய்யணும் இன்னமும் செய்யணும்!

செல்:- இதற்கு தலைமை ஐயா கடிதத்தையேன் எறியச் சொல்றே, இது நம்ம அரசாங்கத்தார் வகுத்த புதிய திட்டம்; அவரைக் கோபித்து என்ன செய்ய, என்மாதிரி அவரும் கடமையைச் செய்யவேண்டியது தான்.

சகுந்:- சரி, சாப்பிட வேண்டாமா?

செல்:- நண்பர் ஒருவர் வீட்டில் சாப்பிட்டுவிட்டேன், நீ சாப்பிடு ......எவங்கிட்டப் போய் நன்கொடை கேட்பது?...சகுந்தலா!

சகுந்:- என்னத்தான்!

செல்:- நன்கொடை கேட்கப் போகட்டுமா? அல்லது நாளைக்கு சாப்பாட்டிற்கு அரிசி இல்லையே, அதைக் கேட்கப் போகட்டுமா?

சகுந்:- சாப்பாட்டிற்கு அரிசி கொஞ்சம் இருக்கு, அதுவே இன்னும் கொஞ்ச நாளைக்குப் போதும், கஞ்சியாக்கூடப் போட்டு.....

செல்:- சரி, நான் வெளியேபோயி, நாலுபேரைக் கண்டுகேட்டு வர்றேன்.

சகுந்:- என்ன கேட்டு வர்ரீங்க?

செல்:- பிச்சையென்னு நினைத்திடாதே, நன்கொடை...நம்ப பருப்புக் கடைச் செட்டியார், விறகுக் கடை விஞயகம், பக்கத்துத் தெரு பண்ணையார் பரமேஸ்வரன்பிள்ளை, மிராசுதார் இராமசுப்பு, இவர்களையெல்லாம் ஒரு பார்வை பார்த்திட்டு வந்தா ஏதாவது கிடைக்கும். அதை அனுப்பிச்சுடலாம்பாரு. ஹெட்மாஸ்டர் மனமும் நிம்மதிபெறும். எனக்கும் இந்த வேலை தொலைஞ்சமாதிரியிருக்கும்.

சகுந்:- என்னத்தான் எவங்கிட்டப் போய் இதையெல்லாம் கேட்பது? இந்த அரசாங்கத்திலே இந்த வேலைக்கு வேறு ஆளே கிடைக்கலையா?......நல்ல உத்தியோகம் போங்க "கறக்கிறது உழக்கு பாலு உதைக்கிறது பல்லுப்போக" இந்தப் பழமொழி உங்க வாத்தியாரு வம்சத்துக்குத்தான். தேர்தல் வந்தா அந்த வேலை, மந்திரி வந்தா காலையிலேயே போயிடுவீங்க, அம்மைக்குத்த பேரெழுதப் போகணும் வீட்டுக்கணக்கு, ஜனக்கணக்குமெடுக்கணும்...... இதெல்லாம் போக மாதம் இப்படி ஒரு உத்தரவு. செய்யுங்க, செய்யுங்க...இதுக்கு கிராம மணியம் உத்தியோகம் செய்யலாமே.

செல்:- இனிச் சொல்லி என்ன சகுந்தலா! போய்வரட்டுமா?

[செல்வன் செல்கின்ருர் செட்டியார் கடை நோக்கி]

செட்டி:- வாங்க வாத்தியார் சார் ...ஆமா, சாமான் வாங்கி எவ்வளவு நாளாச்சு, இப்படிப் பத்துப் பேர் இருந்தா நாங்க பொழைக்க வேண்டாமா

செல்:- அது சரீங்க, சம்பளம் மாதாமாதம் தவருமல் வந்தா நானும் வழக்கம்போல் பாக்கியைப் பட்டுவாடாச் செஞ்சிடுவேன். சம்பளம் வராமே மனுஷன் சாகிருன், நீங்க என்னமோ நினைக்கிறீங்க.

செட்டி:- என்னைய்யா, நீயே பொய் சொல்லுறே, சம்பளம் கொடுக்காமே வேலை வாங்குமா கவர்மெண்டு, நீயே சம்பளத்தை வாங்கிகிட்டுபொய்சொன்னு, உங்கிட்ட படிக்கும் புள்ளைங்க உருப்படுமா? உனக்குமட்டும் சம்பளம் வராது, மற்ற ஆபீசிலேயெல்லாம் வேலை செய்யிறவங்க எல்லாத்துக்கும் வந்திருக்கே. இப்படிப் பொய் சொல்லாதே செல்வன், அவங்கெல்லாம் பாக்கியைத் தீர்த்திட்டு, புதுக்கணக்கு வச்சிட்டுப் போருங்க. உனக்கு மட்டும் மாசாமாசம் சம்பளம் ஒழிஞ்சிக்குது.......உன்னையெல்லாம் வாத்தியாருன்னு சேர்த்தவனைச் சொல்லணும்.

செல்:- உண்மையாகத்தான் சொல்றேன் செட்டியார், இதோடு மூன்று மாதமாச்சு...

செட்டி:- சரி... சரி... பொறுக்கிற வரையிலுந்தான் பொறுக்க முடியும், அப்புறம் எம்மேலே வருத்தப்படக் கூடாது... என்ன வேணும்?

செல்:- "பள்ளிச் சீரமைப்புத் திட்டம்" என்று ஒரு திட்டத்தை நம்ம அரசாங்கம் வகுத்து அதற்கு எல்லா இடங்களிலும் வாத்தியார்கள் நிதி வசூல் செய்கிருர்கள். அதற்காக நீங்கள் ஏதாவது...

செட்டி:- அதுக்கென்ன தரணும்?

செல்:- செட்டியார் ஏதாவதுபணம் கொடுத்தாப் பரவாயில்லேன்னு சொல்றேன்.

செட்டி:- ஏம்பா செல்வன், ஞாயமாக் கேட்டா தரமாட்டேனு, ஏதேதோ சொல்றியே! இதுக்கெல்லாம் எத்தனைபெரிய பெரிய உத்தியோகஸ்தர்களெல்லாம் இருக்காங்க, இந்த வாத்தியாருகளுக்கு மட்டும் இந்தத் திட்டத்து மேலே ஏம்பா அவ்வளவு பிரியம் வந்தது? இதுதான் குறுக்கு வழியிலே இலாபம் சம்பாதிக்கும் வழி. அப்படித் தாம்பா...

செல்:- இல்லை செட்டியார்...

செட்டி:- நீ என்ன சொல்லு! நயா பைசா தரமாட்டேன். சிறு சேமிப்புச் சேர்த்தாங்க, எத்தனை பேரு, எத்தனை காரு, மணியக் காரு,அவரு, இவரு, எம்.எல்.ஏ. ஏத்தனை பெரிய மனுசங்க

வந்தாங்க...... நீயென்னமோ... போப்பா...

[செல்கிறார் செல்வன்]

செல்:- (தனிமையில்) என் வீட்டிற்கு அரிசி பருப்பு வாங்கப் பணம் கேட்டமாதிரியல்லவா செட்டியார் நினைக்கிறார்... வாத்தியாரு மதிப்பு வெளியே போய் பார்த்தாலே தெரியுது. அட அநியாயமே...

[அடுத்தொருவர் உரையாடுகிறார்]

சின்னசாமி:- நீங்க சொல்றதெல்லாம் ஒத்துக்கிட்டேன் சார்...... வாங்கின கடனைத் திருப்பிக் கொடாதபோது இதுவெல்லாம் எதுக்கு உங்களுக்கு... போங்க, போய் இரண்டு பிள்ளைகளுக்கு டியூசனுவது எடுங்க.

செல்:- சே!... என்ன இது...வாத்தியாருன்னு அரையுணு வடைக்குக்கூட நம்பமாட்டாங்கபோலிருக்கே... நான் அப்பவே நினைச்சேன். (செல்வன் நேராக வீடே வந்து சேர்ந்து) சகுந்தலா!

சகுந்:- என்னத்தான்!

செல்:- இந்த உத்தியோகத்திலே இன்னும் நானிருந்தேன்! இறந்தே விடுவேன்... என்ன கேவலமான வாழ்க்கை... சே...!

சகுந்:- என்னத்தான், என்ன நடந்தது?

செல்:- சரி... சரி... ஏப்ரல் மாதத்திலே "பரம்பிகுளம் அணைத்திட்டம்" ஆரம்பமாகுதாம்; அங்கேபோவது போய்...

சகுந்:- ஏன்! அங்கு வாத்தியார் உத்தியோகம் காலியிருக்கா?

செல்:- நீயென்னடி, எப்பபார்த்தாலும்பழிவாங்கிக்கிட்டேயிருக்கே. அங்கே அந்தச் சனியன்பிடிச்ச வேலையுமில்லே ஒண்ணுமில்லே. ஏதாவது கூலிவேலையோ, கல்லோ சுமந்து பிழைப்பை நடத்தலாம்...

சகுந்:- உங்க இஷ்டம் எப்படியோ அப்படி, நான் மறுக்கவா போறேன் ரொம்ப நாளா என் எண்ணமும் இந்த வேலைக்கு முழுக்குப்போடுவதுதான்...இந்த தொழிலை வைச்சு நாம் வாழறது கஷ்டந்தான் அத்தான்.

செல்:- நாளைக்கு அதற்குண்டான முடிவைச் சொல்றேன்.

[இரவு நித்திரையில் ஆழ்கின்றனர், நடுநிசி நேரம் செல்வனின்... எண்ணங்கள்...]

பையன்:- பேப்பர், பேப்பர்,

செல்:- சகுந்தலா, சகுந்தலா,

சகுந்:- என்னத்தான்!

செல்:- பேப்பரை வந்து பாரேன். "ஆசிரியர்களுக்கெல்லாம் அடிப்படைச் சம்பளம் நூறு ரூபாய்" இதைப் பார்த்தாயா?...... மின்சாரம் பொருத்திய அழகான வீடு. ஆசிரியரின் குழந்தைகளுக்கெல்லாம் கல்லூரிவரை இலவசக் கல்வி வசதி... சபாஷ்... பிரயாணங்களில் குறிப்பாக புகைவண்டியில் நம்மவர் குடும்பத்திற்கு தனிக்கேரேச்! அடடடா, என்வளவு மரியாதை! என்ன சௌகரியம். இது வன்றோ அரசாங்கம். இது வன்றோ ஆசிரியர் உத்தியோகம். பார்த்தாயா சகுந்தலா, பெரிய பெரிய உத்தியோகஸ்தரெல்லாம் ஆசிரியர்களுக்கு மதிப்புக் கொடுக்கவேண்டும் என்று கடும் உத்தரவு...... பெண் குழந்தைகளுக்கு கைத்தொழில் கல்லூரி திறக்கப்போருங்களாம். ஏகப்பட்ட வசதிகள்.

சகுந்:- இதுவெல்லாம் நிஜமாகவா அத்தான்!

செல்:- அடி மண்டுகமே, நேற்றைய சட்டசபையில் நிறைவேறிய திட்டமடி-இது...... என்ன சிரிக்கிறே, கடனில்லாமல் கண்ணியமாய் வாழப்போறோம்னு நினைச்சுச் சிரிக்கிறாயா? இராசன் பாடும் பூரண யோகந்தான்.

[திடீரென விழிக்கிறார் செல்வன். பாய் விரித்து, பூனைப்பூவினால் செய்யப்பட்ட தலையணையில் படுத்திருக்கின்றோம் என்ற ஞாபகம்... பக்கத்தில் சகுந்தலா, இராசன் ஆழ்ந்த நித்திரை. அப்பொழுதுதான் செல்வன் தாம் கண்டது கனவு என்றும் 'தான், 1959-ம் ஆண்டு ஆசிரியர் என்ற அபாயகரமான ஞாபகமும், கடைச் செட்டியார், பிறகு விநயகம், இவர்கள் வரிசையும் தென்படுகின்றது; ஏதோ கண்களை இறுக மூடிக்கொண்டு மீண்டும் படுத்தார்......

★

விற்பனையாகிறது!

# "தணலில் தங்கம்"

சி. என். ஏ. அவர்களின் 'மகிழம்பூ மாலை'யும்
டாக்டர் மு. வ. அவர்களின் முன்னுரையும்
நூலுக்குத் தனிச் சிறப்பு!

**மா. கி. தசரதன்,** எம். ஏ.
அளித்திடும்
எழிலோவியம்.

170 பக்கங்கள் : : விலை ரூ. 1-50

**வெண்ணிலா வெளியீடு**
சி. காஞ்சிபுரம்.

4-ம் பக்கத் தொடர்ச்சி

புதுவாழ்வு காணவேண்டும், புதுவழி அடையவேண்டும் என்று எண்ணுகிறவர்கள், 'என்னடா நமக்கு! பழைய காலப்பெயர் இருக்கிறதே? மாற்றிக் கொள்வோம்;'' என்று புதுப்பெயர் பெறுகிறார்கள்.

தங்களுடைய பெயர்கள் விகாரமாகவும், கேலிக்குரியதாகவும் இருப்பதைப் பார்மோசாவிலுள்ள இளைஞர்கள் கண்டார்கள். பன்றித் தலை என்பதுபோன்ற பெயர்கள் எதற்கு நமக்கு?—என்கிற கேள்வி கிளம்பிற்று.

கேலிக்குரிய பெயர் ஏன் எங்களுக்கு?—என்கிறார்கள் அவர்கள். புதுப்பெயர் நாடுகிறார்கள். புதிய வாழ்வு காணுவது, என்கிற முடிவுக்கு அவர்கள் வந்துவிட்டார்களென்று தெரிகிறது.

**பன்றி திருடி! கோழி நகம்! ஆட்டுத் தலை!**—ஆட்களின் பெயர்கள் தான், இவை, பார்மோசாவில். ஆச்சரியம் பிறக்கக்கூடும், பலருக்கு. ஆனால், தமிழ்நாட்டில் வழங்கும், பெயர்களுடைய உண்மைப் பொருளை ஒருகணம் எண்ணிடுவோமேயானால், ஆச்சரியம் எழாது எவருக்கும். ஆதிகேசவன் என்பதற்கு என்ன பொருள்? யாரையாவது கேளுங்கள்! பூவராகன், என்றால், நிலப்பன்றி என்று தமிழ்ப் பொருள்!!

நாற்றுக்குத் தொண்ணூறு பெயர்கள், சம்ஸ்கிருதவாடை கொண்டவை. புராண, இதிகாசங்களிலிருந்து எடுத்துச் சூட்டப்பட்டவை. புராணங்களும், இதிகாசங்களும், ஆரியமார்க்கத்தைப் பரப்ப உண்டானவை; ஆரியமார்க்கம் வேறு, திராவிட நாகரிகம் வேறு; ஆரிய கலாச்சாரம் பலவழிகளில் புகுத்தப்பட்டு, அதன் காரணமாக, திராவிட நாகரிகம் அழிந்தது; ஆளுத்துயாத்திலாழ்த்தி, 'பாபி'களாக்கிவிட்டது; பாபத்தைத் தொலைக்க, ஆரியர்களுக்கு அடங்கியிருந்தால்தான் முடியும் என்கிற புதுத் தத்துவமும், உருவாயிற்று, என்பது இன்று உலகறிந்த உண்மை.

கடந்த தலைமுறையில் வாழ்ந்து வீழ்ந்துபோன மக்கள் மனதில், இந்த உண்மை உறைக்கவில்லை. அறியாமையும், பழைமைப்பற்றும் மிகுந்திருந்த காரணத்தினால், ஆண்டாண்டுகளாக, அழுத்தி வைக்கப்பட்டே வந்தனர்.

மறுமலர்ச்சி அரும்பிற்று! புது எழுச்சி பூத்தது-தமிழ்நாட்டுக்குள், புது எண்ணங்கள் புகலாயின. எதிர்த்தோர் ஏராளம். சபித்தோர் உண்டு. புதுமை மலர்ந்தால், தமக்கு இடமிருக்காதே என்பதால், வைதிகம் வரிந்துகட்டிக் கொண்டு எதிர்த்தது. ஏச்சு, கேலி, சிண்டல், என்கிற சகலவித ஆயுதங்களையும் ஏந்திப் போர் தொடுத்தது.

அடிமைப் படுகுழியில் கிடந்து, அடித்தாலும் அணைத்தாலும் ஆண்டையே கதியென இருந்து, வீசியதைத் தின்று, சொன்னதையெல்லாம் நம்பிக்கிடந்த மக்கள், மத்தியிலே கேள்விக்குறி எழுந்தது! விவாதிக்க ஆரம்பித்தார்கள்! உண்மையுணரும் அறிவோதயம் ஏற்படலாயிற்று.

ஐயோ, ஆபத்து!—என்று அலறினர், பழைமை விரும்பிகள்.

அதன் அறிகுறியாக, தமிழகத்தில், பெயர் மாற்றும் கட்டம் உருவானபோது—அஞ்சினர் வைதிகர்கள்.

ஆரியம் உண்டாக்கிய கற்பனைக் காதைகளை ஒட்டிக் கிளப்பிய பெயர்கள் போய், புதிய பெயர்களைப் பூண்டனர், பலர். அப்படி வைத்துக்கொண்ட புதுப் பெயர்களில், தமிழ் மணமும், தமிழ் நாட்டின் மீதுள்ள பற்றும் தெரியலாயிற்று. தமிழகத்திலே வெற்றிப் பவனிவந்த வேந்தர்கள், வீரச் செயல் குவித்த தீரர்கள், கவிஞர்கள், கற்றறிந்தோர், முதலான பெயர்களுக்கு 'கிராக்கி' ஏற்பட்டது. தேடித் துருவி, கண்டறிந்து, அவைகளைச் சூட்டிக்கொள்வதிலே தனி மகிழ்ச்சி கொள்ளலாயினர், தமிழகத்து இளைஞர்கள். நாட்டுப் பற்றுக்கு, இதுதான் அடையாளம், என்கிற ஒரு எண்ணம் எங்கும் எழுந்தது! தமிழகம் ஒருநாள் தன் விகாரற்று விளங்கிற்று, தமிழ் முழங்கிற்று, வீரம் கொழித்தது, வெற்றிச்சங்கம் எங்கும் ஒலித்தது, என்பதை இந்தப் புதுப் பெயர்கள் சொல்லாமல் சொல்லின. பெயரைக் கேட்டதுமே, புதியதொரு விழிப்பு ஏற்பட்டது மக்களிடம். வாழ்ந்த வரலாறு, நினைவூட்டப்பட்டது. விடுதலைத் தீ மூட்டப்பட்டது.

மறைந்த தமிழறிஞர் **மறைமலை அடிகளார்** தன்னுடைய வேதாசலம் எனும் பெயரை மாற்றிக்கொண்டபோது, சீறினர், பலர்.

இதென்ன கேலிக்கூத்து! — என்று, பழைமை விரும்பிகள், பரபரப்படைந்தனர்; பாபமும் செய்தனர். "தமிழ்மொழி, இதனால் எல்லாம் வளர்ந்துவிடாது. அதற்கு இதல்ல வழி. இப்படி, சம்ஸ்கிருதத்தின் மீது, ஒரு வெறுப்பை உண்டாக்குவது, ஆபத்தில்போய் முடியும். இது பயங்கரமான வெறியாகும். இந்த வெறிச்செயலுக்கு ஆதரவு தரலாகாது,'' என்றெல்லாம் சீறினர்; சினந்தனர்.

பழைமை விரும்பிகளின் ஆத்திரம் கண்டு அஞ்சவில்லை; ஏளனம் பற்றித் துவளவில்லை; பற்பல இடங்களில் செந்தமிழ் கொஞ்சக் கேட்கிறோம். தூய்மையான தமிழ் ஒலி கேட்க முடிகிறது, நம்மால்.

இதற்கு முன்பெல்லாம், உள்நாட்டுத்துறை அமைப்புகளைப் பற்றிச் சொல்லவேண்டுமேயானால், **'ஸ்தலஸ்தாபனம்'** என்கிற சொல்தான் தெரியும். இன்றோ, அரசினரின் அறிக்கைகளில்கூட, **நகராட்சிமன்றம், ஊராண்மைக்கழகம், மாவட்டக்கழகம்** எனும் சொற்களைக் கேட்கிறோம்.

**கேலியெனக் கருதப்பட்டது, நடைமுறைக்கு வந்துவிட்டது. வெற்றிமேல் வெற்றி பெற்றுக்கொண்டு இருக்கிறது.**

இந்தவளர்ச்சியை, சமயம் நேரும்போது, காங்கிரஸ் அரசியல் வாதிகள் கண்டித்துப் பேசுகின்றனர். எங்கே இந்தப்போக்கு வலிவு பெற்று விடுமோ, எனும் அச்சத்தாலும்; அப்படி வலிவு பெற்றால், தாம் வகிக்கும் அதிகாரம் கைவிட்டுப்போய்விடுமோ எனும் ஆத்திரத்தாலுமே ஒழிய; அவர்களே, அறிவர், இப் புத்தெழுச்சியின் அருமையை.

கலாச்சாரமும் நாகரிகமும், அரசியலோடு ஒட்டியிருக்கவேண்டுமே ஒழிய, இரண்டும் வெவ்வேறானவையல்ல. எந்த அரசியல் கட்சிக்கு, கலாச்சார அடிப்பீடம், சரியாக இருக்கிறதோ, அதுதான் வெல்லும்; வெற்றிபெறும்.

புகுந்த இடங்களிலிருந்தெல்லாம் சம்ஸ்கிருதம் எனும் களையை எடுத்தெறியும் முயற்சியில் தமிழார்வம் கொண்டோர் ஈடுபடக் காரணம், வெறியல்ல; தமிழார்வம் பெருகப்பெருக, தமிழுணர்ச்சி பரவப்பரவ, தன்னாலே இது நடைபெற்றே தீரும். எதிர்ப்போர், இப்போதும் உண்டு! எசமானர்களுக்குத் தாசனாக இருப்பதை வெளிப்படுத்திக்கொள்ளும் வீரர்கள், அவர்கள்!! உண்மையான எசமானர்கள். — (மக்கள்!) பிறந்து வளர்ந்து இங்கேயிருக்கிறார்கள்

என்பதைவிட்டு, இன்னும் எதிர்ப்பதாகவும், பிடிக்கவில்லையெனவும், பேசுகிறார்கள். எனினும், தமிழ் முழங்குகிறது! **"தமிழ்நாடு எனும் பெயரை, வை!!"** என்கிற சங்கொலி, கேட்கிறது!!

இந்த முழக்கம் எழஎழ, அமைச்சர்கள், "ஏன் இந்தவெறி? எதற்கு இந்த வீண்வேலை? பெயரைமாற்றுவதா பெரிய அரசியல் பணி?", என்று கேட்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் மட்டுமல்ல, நாட்டிலுள்ள நானாவித அரசியல் கட்சிகளும், நாடக வல்லுநர் முதல் நாடு போற்றும் நாவலர் பாவலர் உட்பட, 'சென்னை' என்பதை மாற்றி, தமிழ்நாடு என்று பெயர் வைக்குமாறு கேட்கிறார்கள்.

வேறு எந்தக் கோரிக்கைக்கும் இப்படி ஒருமித்த குரல் கிளம்பியதில்லை! காங்கிரசைத் தவிர, வேறெந்தக் கட்சியினரும், இப்படிக் கேளாக் காதினராகவும் இருக்க மாட்டார்கள்!!

காங்கிரசுக்காக உழைத்த, **சங்கரலிங்கனார்** எனும் ஒரு உத்தமர், இக்கோரிக்கைக்காகப் பட்டினிகிடந்தே செத்தார். தமிழகமே கண்ணீர் விட்டது.

கண்டும் கலங்காதிருந்த ஒரே மனிதர் உண்டென்றால், அது காமராஜர் தான்.

கலைப் பெரியார் **சம்பந்தனார்**கூட, தான் பெற்ற பட்டத்தைப் பாராட்டி நல்லுரை வழங்க வந்த அமைச்சர்களைப் பார்த்து, "ஐயன்மீர்! தமிழ்நாடு எனப்பெயரிடுக" என்று உருக்கமாக, வேண்டிக் கொண்டார்.

நாடே கேட்டாலும், நல்லோரெல்லாம் சொன்னாலும், நாங்கள் கேட்க மாட்டோம், என்றே இன்னும் பிடிவாதமாக இருந்துவருகிறார்கள் சென்னை அமைச்சர்கள். இப்படிப் பெயர்மாற்றம் செய்வதை, ஒரு சமயம் எள்ளி நகையாடுவார்கள். மற்றோர் சமயம், "இதெல்லாம், கேலிக்கூத்து!" என்பார்கள். "இதுதானா, வேலை!" என்று கேட்பார்கள். ஆனால், அப்படிப்பட்டவர்களுக்கே, உதகையிலுள்ள "ஆரன்மூர் அரண்மனை"யின் பெயரை மாற்றி 'தமிழ்கம்' என்று வைக்கும் ஆசை வந்ததென்றால், நாம் தொட்ட இயக்கம், நீக்கமற நிறைந்து வருகிறதென்றுதானே சொல்லவேண்டும்!!

"இளஞ்செழியனும், அன்பழகனும், மதியழகனும்......" என்று கேலிபேசியவர்கள், இன்று "தமிழகம்" என்று தனித் தமிழ்ப் பெயரிட முன் வருகின்றனர். பெயர் மாற்றுவது, பஞ்சமாபாதகங்களில் ஒன்றுபோல எண்ணிப் பறைசாற்றியவர்களே, இன்று 'தமிழகம்' எனும் பெயரை வைக்கிறார்கள்.

பிரான்ஸ் நாட்டிலிருந்து, இதோ, ஒரு செய்தி கிடைக்கிறது:

> பிரெஞ்சு மொழியில், ஏராளமான ஆங்கில வார்த்தைகள் கலந்து வருவது கண்டு, அதைத் தடுப்பதற்காக **3500** பேர் சேர்ந்து, ஒரு இயக்கம் அமைத்திருக்கிறார்கள்.
>
> ஏப்ரல் முதல் தேதி முதல் பல வாரங்களுக்கு, பிரான்சில் வெளியாகும், தினசரி ஏடுகளில் எது குறைந்த அளவுக்கு வெளிமொழிக் கலப்பை பயன்படுத்துகிறதோ, அதற்கு பரிசு வழங்கவும் முடிவு செய்திருக்கிறார்கள்.

நம்மைக் காயும்; 'கனம்கள்' இதற்கு என்ன சொல்வார்கள்? பிரெஞ்சு மொழியாளரின் இந்த, மொழிப் பற்றினைக் குறித்து, என்ன சொல்வர்? இன்னொரு கேலிக்கூத்து, என்பரா! ஏசுவரா, கேலிசெய்வரா!!

அதிகார போதையில் ஆழ ஆழ காங்கிரஸ்காரர்கள், உலக நாடுகளின் விடுதலைப் போராட்டங்களை மறந்து வருகிறார்கள். வேறெதையும் மறந்தாலும், அயர்லாந்து சுதந்திரக் கிளர்ச்சியை, அவர்கள் மறந்துவிட முடியாது. ஏனெனில் அதைப் பார்த்துத்தான், பல கிளர்ச்சிகளை இங்கேயும், காங்கிரசார் நடத்தியது. அதனைக்கொஞ்சம், இந்த நேரத்தில் நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

**சின்வின்** இயக்கம் கொண்ட ஈடுபாடுகளின் காரணமாகவே, அயர்லாந்து சுதந்திரம் பெற்றது என்பது பலருக்குத் தெரியும்.

ஆனால்; பலருக்கு அந்த இயக்கம், எந்த அடிப்படையில் உருவாயிற்று என்பது தெரிந்திருக்காது. **மைக்கேல் காலின்ஸ்,** எழுதுகிறார்:

> **"உலகமறியும் சின்பின் இயக்கம், அவ்வளவு பெரிதாக உருவாக, அடிப்பீடமாக அமைந்தது மொழிப் பிரச்சினை தான். இந்த இயக்கத்தினை, அயர்லாந்தை அயர்லாந்தியருக்கு ஆக்கும் இயக்கம் என்றே அழைத்தார்கள். உண்மையைச் சொன்னால், அது ஒரு அரசியல் கட்சியே அல்ல! நாம் யார் என்கிற உணர்ச்சியையும், சொந்த மொழியிலே நாம் பேசவேண்டும் என்கிற ஆர்வத்தையும், நமது இசை — நமது கலை—நமது இலக்கியம்—நமது விளையாட்டு—நமது உற்பத்திகளையே நாம் உபயோகிக்கவேண்டும் என்கிற தேசிய உறுதி—ஆகியவைகளை உண்டாக்கவே ஆதியில் அது பாடுபட்டது"**

இந்த வரலாற்றுண்மையை யாரும் மறந்துவிடக்கூடாது. இப்படி உண்டாக்கப்பட்ட, தேசிய உணர்ச்சிதான், பிறகு பெருந்தீயாக மாறிற்று.

அயர்லாந்து விடுதலை வீரரான, **டிவேலரா** எழுதியிருப்பதை உண்மையான காங்கிரஸ்வாதிகள், எண்ணிப் பார்க்கவேண்டும். அவர் எழுதுகிறார்:

> **"அயர்லாந்து மக்களுக்கு, நான் தரவிருக்கின்ற ஒரே சேதி, நீங்கள் ஐரிஷ் மக்களாக வாழவேண்டுமென்றால், ஐரிஷ் மொழியை அழியாமல் காக்கவேண்டும் என்பது தான்"**

இதையே, கவனமூட்டுகிறோம், இந்தச் சமயத்தில்! ஆங்கிலத்தை அகற்றிவிட்டு, ஆட்சிமொழி எனும் பெயரால் இந்தியைத் திணிக்கப் பெருஞ்சதி உருவாகிக் கொண்டிருக்கிறது. அதற்கு, இங்குள்ள ஆட்சியும் துணைபோய்க்கொண்டிருக்கிறது. இச்சமயத்தில், பழம்பெருமை வாய்ந்த, பாகினும் இனிய, பைந்தமிழை, எப்படி நாம் காக்கப்போகிறோம்? எப்படித் தமிழை அழியாமல் காப்பது?

ஆதிகேசவன், பூவராகவன் என்று நம் குழந்தைகளுக்குப் பெயர் வைப்பதன் மூலமா? தமிழ் மொழிக்குள்ளும், தமிழ்க் கலைகளுக்குள்ளும், சாதி-அர்ச்சனையாகம் என்பவைகளைப் புகுத்துவதன் மூலமா? ஆகாஷ்வாணியைக் கொண்டுவந்து நுழைப்பதன் மூலமா? தமிழ்நாட்டை, சென்னையாகவே வைத்திருப்பதன் மூலமா? எது தமிழை வளர்க்கும், பாதுகாக்கும்?

"நீ சொல்வது, நியாயம்தான்; இதெல்லாம், கூடாது," என்று காங்கிரஸ் அமைச்சர்கள், கூறமாட்டார்கள். பதவி மோகம் பிடித்தாட்டுகிறதே! பாயுமே, காங்கிரஸ் தலைமை!! அதனால், இந்தி நுழைந்தாலும், தமிழ்க்கொல்லைக்குள் மந்தி நுழைந்தாலும், பேசாதுதானிருப்பார்கள்— பேசச் சந்தர்ப்பம் கிடைக்கும்போது, தேசிய உணர்ச்சியை நானாவகையிலும் கிளர்ந்தெழப் பாடுபடும் திராவிட முன்னேற்றக் கழகத்தை ஏசத்தான் செய்வார்கள்.

✱

2-ம் பக்கத் தொடர்ச்சி

கிரசைப்பற்றிப் பேசுகிருர்கள். இதோடு, கட்சிப் பிரச்சாரகர்கள் வேறு இருக்கிருர்கள்!!

விளக்கில்லாதவன், இருளிலே நடந்ததால், இடறிவிழுந்து மூக்குடைபட்டான் எனில் பொருளுண்டு. காங்கிரசாருக்கு, பாதை முழுதுமே, அலங்கார ஒளிகள் வகைவகையாக இருக்கின்றன. இருந்தும், தோற்றிருக்கிருர்கள். இதற்குப் பெயர், மக்களின் தொடர்பு இல்லையென்பதா?

**மக்களுடன் தொடர்புகொள்ளும் வழி வசதிகள், ஏராளம்.**

**மக்களின் உள்ளத்தைவிட்டு நீங்காதிருக்கவேண்டும் என்பதற்கு எடுத்துக் கொண்டுள்ள முயற்சிகள் ஏராளம்.**

**எனினும், மக்களுடைய தொடர்பினை இவர்களால் பெறமுடியவில்லை.**

இந்த உண்மையினை, மறந்தோ அல்லது மறைத்துக்காட்ட வேண்டுமெனும் நினைப்பிலோ, தமிழ்நாடு காங்கிரஸ் காரியக் கமிட்டி காரணம் கண்டுபிடித்துச் சொல்கிறது.

ஊருக்கு ஊர் உள்ள காங்கிரஸ் கட்சிகள், மக்களுடன் தொடர்பு கொள்ள முயற்சிக்காமலில்லை. திராவிட முன்னேற்றக் கழகத்தினரின் வளர்ச்சிக்கு, வேண்டிய தடைகளைப் போடத் தயங்குவதில்லை. மாற்றுக் கட்சியினர் கூட்டம் நடத்தினுல், இவர்களும் யாரையாவது ஒருவரைக் கொண்டுவந்து கூட்டங்கள் நடத்தாமலில்லை. உள்ளபடியே, இன்னும் தெளிவாகச் சொன்னுல் சாதாரண இந்த நகரசபைத் தேர்தலில்கூட சென்னையில் சேரி சேரியாகத்தான் சென்ருர் கக்கன்! காமராசர் சொல்வது போல அப்படிப்போயும் சேரிகள் வாக்களிக்கவில்லை காங்கிரசுக்கு!! காமராஜர்கூட, சென்னையின் பல பகுதிகளுக்குச் சென்று, விடுவிடாகப் போய்கூட ஓட்டுக் கேட்டதுண்டு. இது, மக்கள் தொடர்பு தானே! இருந்தும் ஓட்டுக்கிடைக்கவில்லை காங்கிரசுக்கு!!

**என்ன காரணம்?**—முப்பது சதவிகிதம்தான் ஓட்டளித்தார்கள் மத்திய தர, வர்க்கத்தினர். போடவில்லை என்ருர் காமராஜர்.

ஓட்டுப்போட்டோர் 46-சதவிகிதத்தினர், தி.மு.க-வுக்குகிடைத்த பெரும்பாலான ஓட்டுகள் மத்திய தர மக்கள் வாழும் பகுதிகளில் தான் என்பது விளக்கப்பட்டதும். இந்தக் காரணத்தைக் கண்டுபிடித்து அறிவிக்கிருர்கள்.

மக்கள் தொடர்பு கொள்ளாததால் காங்கிரசுக்கு ஓட்டுக்கிடைக்கவில்லையாம்.

ஒவ்வொரு இடத்திலுள்ள காங்கிரசுத் தொண்டர்மீதும் பிரமுகர் மீதும் 'பளுவை'ச் சுமத்த இக்காரணம் பயன்படலாம்.

காங்கிரஸ் தோற்றது தன்னுடைய ஏமாளித்தனத்திலுலே தானே ஒழிய எதிர்க்கட்சிகளின் செல்வாக்கால் அல்ல — என்று காட்டிக்கொள்ளப் பயன்படலாம், இக்காரணம்.

**மக்களிடம், காங்கிரசார் போகிருர்கள்.**

**மக்களோ, காங்கிரசைவிட்டு, எங்கோ போய்க்கொண்டிருக்கிருர்கள்.**

**தொடர்பு வேண்டும்! — என்று சகல முயற்சிகளையும், செய்கிறது காங்கிரஸ்.**

**விட்டால் போதும்! உன் தொடர்பே வேண்டாம்!! — என்று விரண்டு ஓடுகிருர்கள் மக்கள்.**

## முன்புபோலன்றி, இப்போது, காங்கிரசை வெறுக்கிருர்கள், மக்கள்.

இதுதான்உண்மைநிலை! இதனை மறைக்கவும், மாற்றுக் கட்சியின் செல்வாக்கை நாமே ஒப்புக் கொண்டதாக ஆகுமோ என்கிற அச்சத்தாலுமே "மக்கள் எல்லாம் ஓட்டுச் சீட்டுகளை வைத்துக் கொண்டு, எங்கே வரவில்லையே காங்கிரசார்? எனத் தவித்தனர். காங்கிரஸ்தான் போய், தொடர்பு கொள்ளவில்லை" என்று பேசுவது தோல்வியை மறைத்திடும், சூழ்ச்சியாகும்.

இவ்வளவு பெரிய 'அடி' வாங்கியும், இன்னும் காங்கிரசாருக்கு, தெளிவு பிறக்கவில்லை என்பதனையே, இக்கூற்று உணர்த்துகிறது.

"போங்கள்! போங்கள்!! போய் தொடர்பை உண்டாக்கிக்கொள்ளுங்கள். பழகுங்கள். நம்மைப் பற்றிப் பேசுங்கள்." என்றும் கோவையிலே குமுறியிருக்கிருர்கள்.

அப்படிப் போகிற ஆட்கள் இருக்கிருர்களா? என்பது ஒருபுறமிருக்க, காரியக் கமிட்டியின் கட்டளைப்படியே, பொதுமக்களின் மத்தியில் போய் விரசமில்லாமல் திரும்பிவிட முடியுமா, காங்கிரசார்?

**தமிழ்நாடு என்னய்யா ஆச்சு?— ஆகாஷ்வாணி ஒழிந்ததா? — ஊட்டிக்கு ஏன் கொண்டுபோனுர்கள் சட்டசபையை— கறிகாய்க்கும் வரிபோடலாமாய்யா—ஆமாம் வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைக்க என்ன செய்தாய் — தொழிலாளர்களைத் துறைமுகத்தில் படபடவென்று சுட்டாயாமே சரியா? —** இப்படியெல்லாம், பொதுமக்கள், கேள்விமேல் கேள்வி கேட்டால் என்ன சொல்லமுடியும் காங்கிரஸ்வாதிகள்! அதனுல்தானே, பழைய காங்கிரஸ்வாதிகள், பொதுக்கூட்டங்களுக்கே போவது இல்லை. புதிய பேச்சாளிகள் போனுலும், நாட்டின் நிலைமையைப்பற்றிப் பேசாமல், அண்ணுதுரை அந்தபடி நெடுஞ்செழியன் ஆறடி என்று பேசிவிட்டு, சாக்கடையாகிவிட்டது காங்கிரஸ் என்பதை நிரூபித்துக் காட்டிவிட்டு, 'நீட்டு, காசை!' என்று வாங்கிக்கொண்டு, வருகிருர்கள்.

அகப்பையில்வர, சட்டியில் வேண்டாமா! மக்களின் தொடர்பு கொள்ள, ஆட்சியாளர், ஏதாவது நன்மை செய்திருக்க வேண்டாமா!!

மக்களிடம் தொடர்புகொள்ள, காமராசரே, ஒருநாளைக்கு கத்தரிக்காய் விற்கும் கடைக்காரக் கிழவியிடம் வரவேண்டும்? அப்போது தெரியும், காங்கிரசை, எங்கெங்கே, யாரார் விரட்டுகிருர்களென்பது!!

★


## முகவரி மாற்றம்

மே 1-ந் தேதி முதல் "தென்னகம்" சம்பந்தப்பட்ட போக்கு வரத்துக்கள், மணியார்டர்கள் முதலியவைகளையும் ஆசிரியர் கே. ஏ. மதியழகன் அவர்களுக்கான கழக சம்பந்தப்பட்ட கடிதத் தொடர்புகளையும் கீழ்க்கண்ட முகவரிக்கே அனுப்ப வேண்டுகிறேம்.

**"தென்னகம்"**

126, மவுண்ட்ரோடு

சென்னை-6.